த.ம. 4867
40

# திருக்கரைசைப்புராணம்

மூலமும்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7-57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு.

யாழ்ப்பாணத்துச்சுன்னாகம்.

ம. ள. ள. ஸ்ரீ.

அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்

செய்த

பொழிப்புரையும்

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திற்கு அன்பளிப்பாக
இந்நூலை வழங்கியவர்

இவை,

கொட்டியாபுரம்

ஸ்ரீ மாந்.

க. முத்துக்குமாரப்பிள்ளை வன்னிமையவர்கள்

கேள்விப்படி,

திரிகோணம...

வே. அகிலே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வரலாறு.

இந்தப் புராணம், திரிகோணமலைக்குச் சமீபமாயுள்ள மாவலிகங்கைக்கரையிலே "அகத்தியத்தாபனம்" என்று வழங்கப்படுகின்ற கன்ரைசையம்பதியில் எழுந்தருளியிருக்குஞ் சிவலிங்கப்பெருமானுடைய மகத்துவங்களை விரித்துக் கூறும்! இப்புராணஞ் செய்தவர் யாவரென்பது புலப்படவில்லை! சிலர், உமாபதி சிவாசாரியர் பரம்பரையினுள்ளார் ஒருவர் என்பர்!

ஆடியமாவாசைதோறும் மாவலிகங்கையிலே தீர்த்தஸ்நானஞ் செய்யும்பொருட்டுத் திரிகோணமலை முதலிய இடங்களிலிருந்து வருகின்ற சைவசமயிகள் பலருங்கேட்கும்படி ஸ்ரீமத் பூபா[illegible]ளை வன்னிமையவர்களுடைய இடையறாமுயற்சியினால் இந்தப் புராணம் படித்துப் பொருள்சொல்லப்பட்டு வருகின்றது.

சென்ற வருடத்திலே தீர்த்தஸ்நானத்தின் பொருட்டு அங்கே போயிருந்த நம்மைக், குருலிங்கசங்கம பத்திகளிற் சிறந்தவரும், பரோபகாரசீலருமாகிய கொட்டியாபுர வன்னிமையவர்கள் ஸ்ரீ பாங். த. முத்துக்குமாரப்பிள்ளையவர்கள் "இப்புராணம் ஏட்டுப்பிரதிகளிலிருந்தால் இன்னுஞ் சிலகாலத்திற் சிதைந்துபோகும். ஆதலால் இதனைப் பரிசோதித்து உரையோடும் அச்சிட்டுத்தரல் வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

நாமும் அக்கேள்விக்கு உடன்பட்டுக், கொட்டியாபுரம், கட்டுக்குளம், தம்பலகமம், என்னுங் கிராமங்களிலிருந்து பலபிரதிகள் வருவித்துப் பரிசோதித்துத் திருத்தினேம். ஆக அகப்பட்ட பிரதிகள் பத்து. அவற்றுள்; ஒன்று நூறுவருடத்திற்குமுன்னே எழுதப்பட்டுள்ளது; அதுவே நமது பரிசோதனத்திற்குப் பெரிதுந் துணையாயிற்று பின்னர் யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்திலிருக்கும் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்களைக் கொண்டு ஓர் உரையுஞ் செய்வித்து அதனையும் இதனோடு சேர்த்துப் பிரகடனஞ் செய்து முடித்தேம்.

இப்பொழுது இந்தச்சிவஸ்தலங் கிலமடைந்து குருந்தமரங்கள் நெருங்கிய பெரியவனமாயிருக்கின்றது. இதனைக் கொட்டியாபுரம் முதலிய இடங்களிலுள்ள சைவசமயிகள் புதுக்கிப் பிரதிட்டை செய்வார்களாயின்? இப்புண்ணியத்தால் அவரடையும் பலன் நாம் சொல்லத்தக்கதன்று.

இங்ஙனம்,
வே. அகிலேசபிள்ளை.

திரிகோணமலை
விக்கிரம
வைகாசிமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

841.6 54/PR

உ

சிவமயம்.

# திருக்கரைசைப்புராணம்.

## கடவுள்வாழ்த்து.

### விநாயகர்துதி.

பொன்னிரவிதனைவளைத்துப்புருந்துலவுமொருகேமிப்பொற்றேர்மீது
மன்னிரவியெனவிளங்குசுதரிசனமூவிலைவேல்வயங்குசங்க
மின்னிரவினிருள்கடியும்பிறைக்கோடுங்கரத்தேந்திமேவாருள்ளக்[பாம்
கன்னிரவிமதம்பொழிபுங்கரைசையில்வாழ்கரிமுகனைக்கருத்துள்வைப்

இ-ள். பொன்மலையைச் சூழ்ந்து புகுந்துலாவுகின்ற ஒற்றைச் சில்லினையுடைய அழகிய தேரின்மேற் பொருந்திய சூரியனைப் போலப் பிரகாசிக்கின்ற சக்கரத்தையுஞ், சூலத்தையும், விளங்குகின்ற சங்கினையும், இராவிலே தோற்றும் இருளைக் கண்டிக்கின்ற பிறைபோலுங் கொம்பையுந் திருக்கரத்திலே தரித்துத் தம்மைச் சேராதாருடைய மனமென்னும் கல்லினும் நிறைந்து கருணையென்றும் மதத்தைப் பொழிகின்ற திருக்கரைசைநகரில் வாழ்கின்ற யானைமுகக்கடவுளை மனத்திலே நினைப்பாம். எ-று.

"கருணையாமதமெனக் காட்டுமோமுகன்" என வேதாந்த சூடாமணியிலே சொல்லியதுங் காண்க. இரவி- மலை.

### சிவஸ்துதி.

பூமேவுபொன்னிதழிபுனைமுடியும்பகீரதியும்புதுவெண்டிங்கட் (பு
கோமேவுசிறுகொழுந்துமைம்முகமுங்கொழும்பவளங் குடிகொண்மெய்
மேமேவுவிழிபுமையாளிடப்புறமுமபிறவுமாயெம்முனீங்காத்
தேமேவுபொழிற்கரைசைநாதாந்தப்பேரொளியைச்சிந்தைசெய்வாம்.

இ-ள். அழகுபொருந்திய பொன்போன்ற கொன்றைமாலையைத் தரித்த முடியையும், கங்கையையும், புதியவெள்ளிய சந்திரனாகிய முதன்மைபொருந்திய சிறிய கொழுந்தையும் ஐந்து முகத்தையும் கொழுவிய பவளநிறந்தங்கிய திருமேனியையும் அம்பையொத்த கண்களையுடைய உமாதேவியார் தங்கிய இடப்பாகத்தையும் மற்றைய சாங்கோபாங்கங்களையு முடையதாய் எமமுன்னின்று நீங்காத தேன்பொருந்திய சோலையையுடைய கரைசைநகரில் எழுந்தருளியிருக்கும் தத்துவாதீதப் பரஞ்சுடரை மனத்தினினைப்பாம். எ-று.

'மங்கலாசரணம் சிட்டாசாரம்" என வாக்கியமிருத்தலினாலும், ஆன்றோர் வழக்காதலினாலும், இனிதுமுடியும் பலதரிசனத்தினாலும் 'பூமேவு" என மங்கலாசரணத்தோடு தொடங்கினார். பிறவுமாய் என்பதற்கு அருவமுதலியவை யெனினும் ஒக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உமாதேவி.

தளிர்பரவுநூபுரப்பொற்பாதபத்மராகமும்வாய்த்தனிபென்றுப்புந்
தெளியுமுகிர்வச்சிரமும்விழியிந்த்ரநீலமுமெய்ச்சேசகமேழுய்யக் [றி
குளிருமிளநகைமுத்துங்கொண்டுலகந்தொழுப்பவளக்கொழுகொம்பே
ஒளிருமரகதக்கொடிநேர்சிவன்பாகத்துமையலர்த்தாளுள்ளஞ்சேர்ப்பாம்

இ-ள். தளிர்வணங்குகின்ற நூபுரத்தையணிந்த அழகிய பாதமாகிய பதுமராகத்தையும், அதரமாகிய ஒப்பற்ற மெல்லிய பவளத்தையும், தெளிந்த நகம் என்னும் வைரத்தையும், கண்ணென்னும் இந்திரநீலத்தையும் மெய்ம்மையாகிய எழுலகமுமுய்யும்படி குளிர்விக்கின்ற இளநகையாகிய முத்தினையுங் கொண்டு உலகத்தாராலே தொழப்படுகின்ற பவளக்கொழுகொம்பாகிய சிவபிரானுடைய திருமேனியிற் படர்ந்து பிரகாசிக்கின்ற மரகதக்கொடியை ஒத்த அவருடைய பாகத்திருக்கும் உமாதேவியாருடைய செந்தாமரைமலர் போலுந் திருவடிகளை மனத்தினினைப்பாம் எ-று.

சேர்த்தல் - நினைத்தல். "தாள்சேர்ந்தார்" என்பதற்குப் பரிமேலழகர் செய்த உரையிற்காண்க. உலகமுய்யும்படி குளிர்தலாவது தானின்புறவே உலகும் இன்புறுதல். இதிலே பத்மராகம், பவளம், வைரம், இந்திரநீலம், முத்து, மரகதம் என்னும் இரத்தினங்கள் சொல்லப்பட்டு அரதனமாலையலங்காரம் தோற்றல் காண்க. (௨)

### தீர்த்தவிநாயகர்.

அருஞ்செக்கர்வானிறமுமதினெழுந்தபிறைமருப்புமகிலந்தாங்கும்
பெருங்கொற்றப்புயமலையுமதினிறங்குமருவியெனப்பிறங்குகையு
மருங்குற்றகரிமுகமுமதின்மதம்போற்கருணைபொழியனழுயாரு
விரிஞ்சற்குமெட்டாதவருட்டீர்த்தக்கணபதிதாள்வேண்டிக்கொள்வாம்

இ-ள். அரிய செக்கர்மேகம்போன்ற நிறமும் அந்தச்செக்கர் மேகத்திலெழுந்த பிறைபோன்ற கொம்பும் எல்லாவற்றையுந் தாங்குகின்ற பெரிய வெற்றியையுடைய புயமென்னும் மலையும் அம்மலையினின்று இறங்குகின்ற அருவியைப்போல விளங்குகின்ற திருக்கரமும் மருங்கிற்பொருந்திய யானைமுகம்போன்றமுகமும், அதன்மதம் போலப்பொழிகின்ற கிருபைவெள்ளமும் நீங்காத தீர்த்த விநாயகருடைய திருவடிகளை வேண்டிக்கொள்ளுவாம்.

பிரமாவுக்கும் அறிதற்கரிய அருளையுடைய தீர்த்தவிநாயகர் என்றது கரைசையில் அகத்தியர் தாபித்த விநாயகரை. (௩)

### கந்தசுவாமி.

தளையாடமதுவுருக்குந்தண்ணளிக்கற்பகக்காவுட்டானமாதர்
விளையாடல்கண்டிருக்குமமரர்பிரான்பெருஞ்செல்வம்விளங்கவேண்டி
வளையாடுகடல்குடித்தவைவேலாற்கிரவுஞ்சவரையுஞ்சூருந்
துளையாடவிகன்மலைந்தகந்தன்மலரடியிணைக்கீழ்த்தொழும்புசெய்வாம்.

இ-ள். முறுக்கு நெகிழத் தேனைச்சொரிகின்ற குளிர்ந்தவண்டுகளையுடைய கற்பகச்சோலையினீழலிலே அரம்பைப் பெண்களுடைய நடனத்தைப் பார்த்து இருக்கின்ற இந்திரனுடைய பெரியபாக்கியம் நிலைபெறும்படி விரும்பிச்சங்குகள் பொருந்திய கடலையுண்ட கூரியவேற்படையினால் கிரவுஞ்சமலையுஞ் சூரனுந்துளைபடப் போரைச்செய்தருளிய கந்தசுவாமியினது செந்தாமரை மலர்போலுந் திருவடிக்கீழ் நின்று தொண்டுசெய்வாம் எ-று.

தளை - வரம்பு எனக்கொண்டு 'ஆடுபசிபுழந்த" என்பதற்கு நச்சினார்க்கினியர் அடுகின்றபசி என உரைத்ததுபோல "ஆட" என்பதற்கு அடும்படி எனக்கொள்ளினும் "தளையாட விளையாடல்" எனக்கூட்டிக்காற்சிலம்பு அசைய எனக்கொள்ளினும் பொருந்தும். (௪



### சம்பந்தர்.

நூல்கொண்டவாரணமுமுபநிடமும்வைதிகமுநுவலுமுண்மை (ன்றிக்
மேல்கொண்டகவுணியர்தம்பெருந்தகையுமுலகனைத்தும்விளங்கத் தோ
கால்கொண்டவரைச்சிலையாரிடப்பாகம்பிரியாதாள்கலசக்கொங்கைப்
பால்கொண்டசீகாழிப்பிள்ளையார்பதமலரைப்பணிந்துகொள்வாம்.

இ-ள். நூலின் தன்மைகொண்ட வேதமும், வேதாந்தமும், வேதசம்பந்த சாத்திரமும், சத்தியத்தையே மேலாகக்கொண்ட கவுணியரது பெரிய தகுதியும், உலகெங்கும் விளங்கும்படி தோன்றி அடிபொருந்திய மலையை வில்லாகவுடைய சிவபெருமானது இடப்பாகத்தை நீங்காத உமாதேவியாரது குடம்போன்ற தனத்தின்பாலைப் பெற்றுண்ட திருஞானசம்பந்த சுவாமிகளுடைய பாதமாகிய மலரை வணங்கிக்கொள்ளுவாம் எ-று.

உபநிடதம் உபநிடம் எனவழங்கப்பட்டது, தெய்வதம், தெய்வம் போல. வைதிகமென்றது வேதசம்பந்தமான ஸ்மிருதி முதலியவைகளை. (௫)

### சுந்தரர்.

ஆராயுமணமுடிக்குமக்காலையாவணங்கொண்டங்ஙனெய்தித்
தோராதுவழக்குரைத்துவலிந்தாண்டுபாடல்பயிறொழும்புகொண்ட
ஏராருஞ்சடாமௌலிப்பெருமானையொருதூதுக்கிருள்வாயவிட்ட
வாராருந்தரளமணிவயலூரன்றாமரைத்தாண்மனத்துள்வைப்பாம்.

இ-ள். ஆராய்ந்து கொள்ளப்பட்ட விவாகத்தைமுடிக்கும் அக்காலத்திலே மூல ஓலையைக்கொண்டு அவ்விடத்தே வந்து தோலாமல் வழக்குப்பேசி வலாற்காரமாய் அடிமைக்கொண்டு பாடுதலைச் செய்தலாகிய திருத்தொண்டினை ஏற்றுக்கொண்ட அழகுபொருந்திய சடைமுடியையுடைய சிவபிரானை ஒருதூதின் பொருட்டு இருளிலே அனுப்பிய சுந்தரமூர்த்திநாயனாருடைய தாமரைமலர்போலும் பாதங்களை மனத்துள்ளே வைப்பாம் எ-று.

நீர்பொருந்திய இரத்தினமாகிய முத்துகளையுடைய வயல்சூழ்ந்த திருவாரூருடையவராகிய சுந்தரமூர்த்தி எனக்கூட்டுக. ஒருதூதென்றது பரவையாரிடத்துப் போய்த் தமக்காகப் பேசினதை. "ஊரன் சொன்ன" எனத் தேவாரத்திலே வழங்கியதுங்காண்க. தோலாது என்பதின் லகரம்தோராது என ரகரமாகத் திரிந்து நின்றது. "அரத்தசமருளச்செய்த சேறடி' (சிந்தா. இல. அஉ.) என்பதுபோல. (௬)

### நாவரசர்.

வல்லோடுபொருதமுலைமலைவனிதைபிரியாதவாமத்தாமத்
கல்லோடுபொருதகண்டத்தாளுடையவெங்கள்பிரானருளினாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லோதப்பெருந்தரங்கஞ் சுருட்டியெழுங்கறைகடலிற்றொடுத்துவி
கல்லோடுங்கரைசேருந்திருநாவுக்கரசர்பிரான்கழற்கால்போற்றி. (௬

இ - ள். சூதாடு கருவியை யொத்த முலையையுடைய மலைமகள் பிரியாத இடப்பக்கத்திருமேனியையும், இருளோடு பொருகின்ற காளகண்டத்தையுமுடைய சிவபிரானுடைய அருளினாலே முதிர்ந்த பெருக்கையுடைய திரையைச் சுருட்டி எழுந்து ஒலிக்கின்ற கடலிடத்தே கட்டிவிட்ட கல்லோடு மிதந்து கரைசேர்ந்த வாகீசப் பெருமானுடைய கழலையணிந்த திருவடிகள் துதிக்கப்படுவன. எ - று.

எங்களையாளுடைய சிவபிரான் என இயையும். போற்றி என்பதனுள் இகரஞ் செயப்படு பொருள் விகுதி; ஊருணி என்பதனுட் போல. வாழிய என்பது போலக் கொண்டு காக்க எனப்பொருள் கூறினுமமையும். (எ)

மாணிக்கவாசகர்.

மதிக்கின்றவுலகேற்பப்பரவியவைதிகசைவவழியீடேறக்
கதிக்கின்றகொடுஞ்சமணர்விண்ணேறமண்ணேறிக்ககனமாக
விதிக்கின்றவம்பலத்துளானந்தநடம்புரியும்வெளியின்மீது
பதிக்கின்றமாணிக்கவாசகர்பொற்பதமலரைப்பணிதல்செய்வாம்.

இ -ள். மதிக்கப்படுகின்ற உலகினுள்ளார் ஏற்கும்படி பரந்த வேதசிவாகமமார்க்கங்கள் பெருமையடையவும், மிகைகொள்ளுகின்ற கொடிய சமணர்கள் விண்ணுலகமடையவும், பூமியிலே தோன்றி ஆகாசமாக விதிக்கப்படுகின்ற சபையினுள்ளே ஆனந்த நடனத்தைச் செய்கின்ற பரவெளியினிடத்தே பதிக்கின்ற மாணிக்கம்போலும் வாசகத்தையுடையவராகிய திருவாதவூரடிகளுடைய அழகிய பாததாமரைப் பூவை வணங்குவாம். எ - று.

"நேயத்தா லாநந்தவா ரிதியிலான்மாவைத் தானழுத்தல் தானெங்கையார் பாதந்தான்." என்றபடி அவர்நடனம் ஆன்மாக்களை ஆநந்தத்திலே அழுத்தற்குக் காரணமாதலின், "ஆனந்தநடம்" என்றார். (அ)

மற்றையதொண்டர்.

மைக்குறிசேர்விழியுமையாண்மகிழ்பாகர்புகழனந்தம்வாழ்த்திவாழ்த்தி
அக்குறிசேர்நாக்குறியுமனுபோகமயிர்ப்புளகமரும்பாகின்ற (௯
மெய்க்குறியும்பால்புரையும்வெண்ணீற்றுநுதற்குறியும்வில்வந்தோய்ந்
கைக்குறியுமாறுதிருத்தொண்டத்தொகையினரெங்கருத்துளாரே.

இ - ள். மையடையாளம் பொருந்திய கண்ணையுடைய உமாதேவியார் மகிழும் பாகராகிய சிவனுடைய கீர்த்திகளுள்ளே பலவற்றைத் துதித்துத்துதித்து அழகிய வடுப்பொருந்திய நாத்தழும்பும், சிவானுபோக காரணமாய் ரோமாஞ்சதை எழும்புகின்ற சரீரக்குறியும், அவருடைய பாலையொத்த வெண்மையான விபூதியணிந்த நெற்றிக்குறியும், அவரை அருச்சிக்கின்ற வில்வத்தழைதோய்ந்த கைக்குறியும் ஒருகாலமும் நீங்காத திருத்தொண்டத்தொகையினர் எமது மனத்திலுள்ளவர். எ - று.

திருத்தொண்டத் தொகையின ரென்றது சுந்தரமூர்த்திநாயனாராலே "தில்லைவாழந்தணர்தம் மடியார்க்குமடியேன்" என்று துதித்த திருத்தொண்டத்தொகையிற் சொல்லப்பட்ட அடியாருள்ளே வாகீசருஞ் சம்பந்தரும் ஒழிந்த தில்லைவாழ் அந்தணர் முதலாயுள்ள அடியாரகளை. இதிலே "ஆசைப் பாட்டினரனைப்புகழுதல்" எனவும் "மயிர்ப்புறம் புளகித்தல்" எனவும் வாசப்பூதி யுருத்திரமாமணி பூசிப்பூணல்" எனவும், "எந்தையீசனருச்சனையோம்புதல், எனவும் உபதேசகாண்டத்திற் கூறப்பட்ட அடியாரிலக்கணங்களை அநுவதித்தாரேனும் இலக்கணையால் மற்றையவைகளையுங் கொள்க. அ - அழகு. (௯)



குருவணக்கம்.

அண்டர்பிரானடமாடுந்தில்லைமணிமன்றதனிலகலாதென்றும்
விண்டசிவசித்தாந்தவேதாந்தப்பொருள்விளக்கும்விளக்காகித் (௰
தொண்டறியா நாயேனுக் கருள்புரிந்து கிளைமுழுதுந்தொழும்புகொண்
எண்டகுசீரீசானச்சிவன்மலர்த்தாண்மறவாதென்னிதயந்தானே.

இ - ள். தேவாதிதேவராகிய சிவபெருமான் திருநடஞ் செய்தற்கிடமாகிய அழகிய தில்லையம்பலத்திலே நீங்காதிருந்து விரிந்த வேதசிவாகமங்களின் முடிவாயுள்ள மெய்ப்பொருளை எப்போழுதும் பிரகாசிப்பிக்குஞ் சுப்பிரதீபமாகித் தொண்டுசெய்தலறியாத நாயேனுக்கும அநுக்கிரகஞ்செய்து நாயேனுடைய சுற்றங்கள் முற்றையுந் தொழும்புகொண்டருளிய எண்ணத் தகுந்த மெய்க்கீர்த்தியையுடைய ஈசானச்சிவனுடைய செந்தாமரை மலர்போலுந்திருவடிகளை என்னிருதயம் மறக்கமாட்டாது. எ -று.

ஈசானச்சிவன் என்றது உமாபதிசிவாசாரியரைப்போலும். சங்கற்பநிராகரணப்பாயிரத்திலே உமாபதிசிவாசாரியர் சிதம்பரத்திலே தேர்மண்டபத்திலிருந்து மாயாவாதிமுதலிய சமயிகளை வாதஞ் செய்து வென்று வேதசிவாகமப்பெருளைத் தாபித்தார் எனப் பெறப்படுதற்கேற்ப இங்கே "மன்றதனி லகலாதென்றும், விண்டசிவசித்தாந்த வேதாந்தப்பொருள் விளக்கும் விளக்கமாகி" எனக் கூறுதலானும், பின் புராண வரலாற்றிலே "கொற்றங்குடிவாழும்பிரான் சரணதுதுதிகொண்டே" எனக்கூறலானும் பெறப்படும். பெறவே இந்நூல்செய்தோர் அவர்சீடர் என்பாருமுளர். (௧0)

புராணவரலாறு.

வண்ணமலிவடகைலைக்கொடுமுடியாந்தென்கைலைமணியார்தம்மைத்
தண்ணமருமலரிட்டுத்தாடொழுவான்பொருட்டங்ஙன்சாராநின்ற
கண்ணகலுங்கலைஞானத்தெளிவனைத்துங்கைவந்தகலசயோனி
அண்ணலுமுத்தரமுகமேயாகியமாவலிகங்கையாடும்போதில்.

இ - ள். அழகுநிறைந்த உத்தரகைலையின் கொடுமுடியாகிய தக்கிண கைலையிலெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானைக்குளிர்ந்த பூக்களைப்பாதத்திலிட்டு வணங்கும்படி அங்கே வந்த அகத்தியரும் வடக்குநோக்கிச் செல்லுதலையுடைய மாவலிகங்கையிலே தீர்த்தமாடும்போது எ - று.

இடமகன்ற சாத்திர ஞானபாதங்க ளெல்லாம் நன்குபயிலப்பெற்ற அகத்தியர் எனக் கூட்டுக. கலச யோனி - அகத்தியர். கலசம் - குடம்.

ஆங்கொருபேரற்புதமாவசரீரிவாசகத்தாலண்ணலார்தம்
பாங்கமருந்தென்மலயம்பயின்றதமிழ்க்குறுமுனிவபயிலுகின்ற
லிங்கமருமீக்கங்கையிரும்பெருமையியல்பிவையாமிங்ஙனீயு (௰௧
லிங்கம்மைத் தாபனஞ்செய்திடுதியெனவுவனறியவுரைத்திட்டாரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ - ள். அங்கே சிவபிரான் ஒரு பெரிய அற்புதமாக அசரீரிவார்த்தையினால் அகத்தியனே! வசிக்கின்ற இவ்விடத்தில் நீயும் ஓங்கும்படி நம்மைத் தாபனஞ்செய்யக்கடவாய் என்று உவாதியும்படி சொல்லியருளினார். எ - று.

தெற்குப்பக்கத்திலே உள்ள பொதிய மலையிலிருக்கின்ற குறுமுனி என இயையும். (௧௨)

அக்கணமேதாபனஞ்செய்தவ்விறைக்குச்சூதமுனியருளிச்செய்த
திக்கதிரும்வடபாடைப்புராணத்தைத்தென்கலையின்விருத்தப்பாவாற்
றிக்கிசையவருந்தொண்டர்செய்தியெனவென்னறிவுஞ்சிறிதுஞ்சேர்த்தி
யொக்கவுரைத்தனன்கொற்றங்குடிவாழும்பிரான்சரணத்துறுதிகொண்டே

இ - ள். அந்தச் சமயத்திலே அகத்தியராலே பிரதிட்டை செய்யப்பட்ட அக்கடவுளுக்குச் சூதமுனிவர் சொல்லியருளிய ஆரியபாடைப் புராணத்தைத் தமிழ்ப்பாடையிலே விருத்தப்பாவினாலே திக்கிற் பரந்த கீர்த்தியையுடைய அரிய தொண்டர்கள் செய்க என யானும் கொற்றங் குடியிலெழுந்தருளியிருக்கும் பிரானுடைய திருவடிகளின் உறுதியைக் கொண்டு என்னறிவையுஞ் சிறிது சேர்த்திச் சேரச்சொல்லினேன். மிக முழங்குகின்ற வடபாடை. (௧௩)

அவையடக்கம்.

நன்றிதருபெரியோர்கணவின்றபலபுராணத்தினன்சொற்கேட்டோர்
வென்றிதருசெவிக்கென்சொலேற்குமோவெனுமையம்வேண்டாநின்
என்றுமரன்புகழ்தேடுமியல்புடையாரிவரன்றோவஃதுபந்தத் தேன்
கொன்றையணிசடாமௌலிச்சிவபெருமான்புகழேனவேகொள்வரன்றே

இ - ள். நன்மையைத் தருகின்ற அறிவிற் பெரியோர்களாற் சொல்லப்பட்ட பலபுராணங்களிலேயுள்ள சிறந்த சொற்களைக் கேட்டோருடைய வெற்றி பொருந்திய செவிகளுக்குச் சிறியேனாற் சொல்லப்பட்ட புன்சொல்லும் ஏற்குமோ என்னுஞ் சந்தேகத்தை வேண்டாமல் நிற்கின்றேன். எப்போதுஞ் சிவகீர்த்தியைத் தேடுமியல்பையுடையார் இவரல்லரோ! ஆதலால் யான்சொல்லும் இதுவும் அந்தக்கொன்றை மலரையணிந்த சடாமுடியையுடைய சிவனுடைய கீர்த்தியென்றே கொள்ளுவார். எ - று.

---

## இலங்கைச்சருக்கம்.

பூமேவுமனுவனைத்தும்புசிப்பதற்குத்தனுகரணபுவனபோகந்
தாமேமுன்பளித்தருளுந்தனிஞானமுதற்றலைவன்சார்போன்றின்றி
நாமேவுபொருளனைத்துநந்துதற்காய்நன்குகடந்தவூழிக்
கோமேவுபெருங்காலக்கொள்ளையிருடொலைந்துபுலருங்காலை

இ - ள். பூமியிலுள்ள மானுடரனைவரும் வினைப்பயன்களை அநுபவித்தற்காகத் தனுகரண புவனபோகங்களைத் தாமே முன்பு கொடுத்தருளிய ஒப்பற்ற ஞானமுதல்வர் சார்பொன்றுமின்றி நாமமடைந்த பொருளெல்லாம் அழிதற்காகப் பெரிதாக நடைபெற்ற உகாந்தமென்கின்ற முதன்மைபொருந்திய பெரிய காலத்தில் கூட்டமாய் இருளெல்லாந் தொலைந்து புலருங்காலத்திலே-



தனு - உடம்பு. கரணம் - மனமுதலியகருவி. புவனம் - உலகம், போகம், பெண்டிர், பிள்ளை, பண்டபதார்த்தமுதலிய அநுபவிக்கப்படும் பொருள்கள்.

வேறு.

செப்பருந்தனிச்சுபாவசிற்சத்தியதனைநல்கி
அப்பெருஞ்சத்திதன்னிலாயிரத்தொருகூற்றத்து
மெய்ப்பராசத்திதோன்றிவிளம்புமஃதருளினாலே
தப்பிலாச்சுத்தமாயைதன்னினாதாதியைந்தும,

இ-ள். சொல்லுதற்கரிய ஒப்பற்ற சுபாவ சிற்சத்தியைச் சிருட்டித்து அந்தச் சிற்சத்தியிலிருந்து ஆயிரத்தொரு கூற்றிலே மெய்ம்மையான பராசத்தியைத் தோன்றுவித்து சொல்லப்படுகின்ற அதனுடைய அருளினாலே தவறில்லாத சுத்தமாயையிலிருந்து நாதம் முதலிய ஐந்தையும் தோற்றுவித்து எ-று.

நாதாதி என்றது நாதம் விந்து மகாரம் உகாரம் அகாரம் என்னும் பிரணவக்கலைகளைந்தையும். (௨)

பதித்திடுவன்னமைந்திற்பலகலைநான்குவேதந்
துதித்திடுபுராணமாதிதொக்கநூல்பலவுமன்றித்
திதித்திடுவாக்குநான்குந்திகழ்சரியாதிமூன்றும்
உதித்தசாலோகமாதியோதியமூன்றுநல்கி.

இ- ள். துதிக்கப்படுகின்ற நாதமுதலிய ஐந்தினின்றும் பலகலைகளையும், நான்குவேதங்களையும் துதிக்கப்படுகின்ற புராணமுதலாகத் தொகுக்கப்பட்ட நூல்பலவற்றையுமல்லாமல் திதிக்கப்படுகின்ற நான்கு வாக்குகளையும், விளங்குகின்ற சரியைமுதலிய மூன்றையும், உதித்த சாலோகமுதலாகச் சொல்லப்பட்ட மூன்றையுஞ் சிருட்டித்து எ - று.

நான்குவாக்கென்றது வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை என்பவைகளை. இவற்றின் விரிவைச் சித்தியாரிற்காண்க* சரியையாதி சரியை கிரியை, யோகம், என்பன. சாலோகாதி சாலோகம், சாமீபம், சாரூபம்.

அமைப்புறுமநந்ததேவரருளினாலதோமாயைக்கண்
இமைப்புறுதத்துவங்களியம்பியமுப்பத்தொன்றுஞ்
சமைப்புறுசகலர்க்குற்றதனுமுதனான்குந்தோன்றி
உமைக்கிறைபாகித்தானுமுறைந்திடுநேயமுற்றே.

இ-ள். அமைத்தலைப்பொருந்திய அநந்தேசுவரருடைய அருளினாலே அதோமாயையினின்று பிரகாசிக்கின்ற முப்பத்தொரு தத்துவங்களையும், சமைத்தலைப் பொருந்திய சகலர்க்குப்பொருந்திய தனுகரண போகங்களையுந் தோற்றுவித்துச் சத்திசமேதராய்த் தாமும் இருக்கும் நேயம் பொருந்தி. எ- று.

அதோமாயை - அசுத்தமாயை. முப்பத்தொருதத்துவம் என்றது சிவதத்துவம் ஐந்தையும் நீக்கி ஆன்மதத்துவம் இருபத்துநான்கையும் வித்தியாதத்துவம் ஏழையும். சகலர் - ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமுடைய ஆன்மாக்கள். (௪)

---

* சித். முதலாஞ்சூத் ௨௦, ௨௧, ௨௨, ௨௩.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளக்குறுங்கோடிவாலசூரியருதயமொப்ப
விளப்பரும்பஞ்சபூதமெய்யொடும்விளங்காநிற்கும்
அளப்பருங்கைலைமீதிலைந்தொழில்வகைநடாத்தி
வளப்பருஞ்சகளமாகிமருவியநாளிலோர்நாள்.

இ - ள். ஒளியைச்செய்கின்ற கோடி இளஞ்சூரியர் உதயம்போலச் சொல்லுதற்கரிய பாஞ்ச பௌதிக சரீரத்தோடும் விளங்கா நிற்கின்ற அளத்தற்கரிய திருக் கைலாசமலையிலே சிருட்டி, முதலிய ஐந்துதொழில்களையு நடத்திவளமமைந்த பரிய சகளவடிவமாகி எழுந்தருளிஇருந்த நாளில் ஒருநாள்.
பாஞ்ச பௌதிகம் - பஞ்சபூதசம்பந்தமுடையது. (௫)

முப்புரத்தலைவர்நான்குமுகத்தயனருளினாலே
இப்புவனதிக்கெல்லாமிடரிழைத்திடுதல்கேட்டே
ஒப்பகல்சுருதிபூண்டவொருதரைத்தேரிலேறி
அப்புரமூன்றுமையனழலெரிமூட்டஞ்ஞான்று.

இ - ள். அந்தக்கடவுள் முப்புர வாசிகள் நான்குமுகத்தையுடைய பிரமாவினருளினாலே இந்தப் பூமிமுதலியவற்றிற்கெல்லாம் இடர்செய்தலைக்கேட்டு ஒப்பற்ற வேதக்குதிரை பூட்டிய பூமியென்னும் ஒருதேரிலேறி அந்தப் புரமூன்றையும் அழலுகின்ற அக்கினிமூட்டி எரித்த அப்பொழுது. எ - று

உம்பர்கண்முனிவர்சித்தர்யோகிகளியக்கரேனோர்
நம்பெருந்துணையேதேவநான்மறைப்பொருளேயிங்ஙன்
வெம்பியபுரங்கண்மூன்றும்விட்டிலையாகிலந்தோ
எம்பெரும்பதியுள்யாங்களிருக்கின்றதெவ்வாறென்றார்.

இ - ள். தேவர்களும், முனிவர்களும், சித்தரும், யோகிகளும், இயக்கரும், மற்றையோரும், சிவபிரானைநோக்கி நம்முடைய பெருமையாகிய துணைவரே! தேவனே! நான்குவேதங்களுக்கும் பொருளாயுள்ளவரே! இங்கே எம்மேற் பகைகொண்ட புரங்கள்மூன்றையும் அழியாதொழிவீராயின்; ஐயகோ! எம்முடைய பெரிய வாசஸ்தானத்துள் யாங்கள் இருக்கின்ற முறைமை எப்படி என்றார்கள் எ-று.
சுவாமீ! முப்புரதகனஞ்செய்த கருணையினாலே யாமெல்லாம் எம்பதியுள் இடையூறின்றி வசிக்கின்றேம் என்றவொன்க. (௭)

பயில்பிலப்பதியுள்வைகும்பைத்தலைத்துத்திப்பத்தி
வெயின்மணிச்சருப்பமின்றேன்மேருவைவளைப்பதெங்ஙன்
எயின்மணிப்புரங்கண்மூன்றுமெரிக்கின்றதெங்ஙனென்றே
அயிலுடைச்சூலமேந்துமண்ணலாரருளக்கேட்டு.

இ - ள். கீழே பொருந்திய பாதாள லோகத்திலே வசிக்கின்ற படம்பொருந்திய தலையிற் புள்ளிவரிசையையும், ஒளிபொருந்திய ரத்தினத்தையுமுடைய சர்ப்ப மில்லையாயின்; மகா மேருவை வில்லாக வளைப்பதெப்படி! மதிலையுடைய அழகிய முப்புரங்களையும் எரிப்பது எவ்வாறு! என்று கூறிய சூலப்படையைத் தரித்த சிவபிரான் சொல்லக்கேட்டு. எ - று (௮)



பாம்புதானே மகாமேருவை வில்லாகவளைத்தற்கு நாணியாகி முப்புரங்களையும் அழித்தற்கு இன்றியமையாத் துணையாயிற்று, அஃதில்லையாயின் முப்புரதகனம் முடியாதென்றார் என்க.

மருங்கினிற்கிளர்ந்தவாதம்வாளியிற்சிறகதாகித்
திருந்தரைக்கணத்தினுள்ளேதிரிபுரஞ்செந்தீமூட்டுடன்
பெருந்திறன்பேசாதந்திப்பிறைமுடிப்பெருமானெண்கொண்
டருஞ்சிறைக்கலுழற்காற்றுவரவினைப்புகழ்ந்ததென்று.

இ - ள். பக்கத்திலே அப்பொழுது எழுந்த காற்றானது, அந்திக்காலத்துச் சந்திரனை முடித்த சிவபெருமான் தம்முடைய அம்புக்குச் சிறகாயிருந்து திருந்திய அரைக்கணத்தினுள்ளே முப்புரத்துக்கும் நெருப்பு மூட்டிய என்னுடைய பெரிய வலிமையைப் புகழ்ந்து பேசாது அரிய சிறகையுடைய கருடனுக்கு ஆற்றாத பாம்பைப் புகழ்ந்தது யாதுகாரணங்கொண்டு என்று.
முற்கவியிலே "சருப்பமின்றேன் மேருவை வளைப்பதெங்ஙன்" என்பதற்கு மறுதலையாக வலியற்றதென்பது தோன்ற "கலுழற்காற்றுவரவு" எனப்பட்டது. (௯)

உள்ளமேல்வெகுளிபொங்கவுருத்தெழுந்தரவைநோக்கிக்
கொள்ளைவான்கனகமேருக்கொடுமுடிம்தாறுந்தோறும்
எள்ளளவிடையுமின்றியெழிற்பணைடவியான்மூடிற்
றள்ளநானறைவெனென்றுதனிவளிசாற்றக்கேட்டு.

இ - ள். மனத்திலே கோபம் அதிகப்பட சினந்தெழுந்து சர்ப்பத்தை நோக்கி கூட்டமாகிய பெரிய பொன்னையுடைய மேருமலையின் கொடுமுடிகளையெல்லாம் எள்ளளவேனும் இடைவெளியில்லாமல் அழகிய படக்காட்டினால் மூடினால் அவைதள்ளுண்ண யான் அடித்து உடைப்பேன் என்று ஒப்பற்ற காற்றுச் சொல்லக்கேட்டு. எ - று. (௧௦)
பணாடவி- படசொன்முடிவு. நெருக்கினாற் பணாடவியென்றார்.

உலகெல்லாந்தொடுத்துநின்றவுயர்வடவரைபேற்கொண்டு
பலபணத்தொகைபானச்சுப்பற்பணியரசுமூடக்
குலவரையேழுமேருக்குன்றமுங்குலுங்கவட்ட
வலயபூதரம்பூச்சக்கிரிமண்ணரிதிகிரியெய்ப்ப.

இ - ள். உலகமெல்லாவற்றையும் தாங்கிநின்ற உயர்ந்த மகாமேருமலையை மேற்கொண்டு பலபடக்கூட்டத்தினாலே நச்சுப்பல்லையுடைய சர்ப்பராசன் மூடச் சப்தகுலமலைகளும் மகாமேருமலையும் அசைய சூழ்ந்த அட்டபர்வதங்கள் குயவனுடைய மண்ணை அரிகின்ற திரிகையை ஒப்ப எ - று.

உடுக்குலமுதிரவோரேழுவரியுமொருபேராழ
வடுக்குலைந்தழியவெய்யோனம்புலிதிசைமாறுட
சடக்கெனவெழுந்துவாதந்தன்பெருவலியாலெற்ற
வடுக்கமுந்தாமுமாகினியிமையோர்கணண்ணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ - ள். நக்ஷத்திரக்கூட்டம் உதிர எழுசமுத்திரமும் ஒன்றாக அடுக்கு உலைந்து அழிய சூரியனுஞ்சந்திரனுந் திசையின் மாறுபட துண்ணென எழுந்து காற்றானது தனது பெரியவலியினாலே அடிக்க தேவர்கள் மிகவும் நடுக்கத்தோடும் அடைந்து எ - று.

ஒருபோராக எ - து எல்லாம் ஒன்றாகக்கலந்து ஏழுஎன்னும் பெயரின்றி ஒன்று என்னும் பெயருடையதாக. (௧௨)

சுற்றியமந்தரத்தைச்சுழற்றியதன்றுகண்டேம்
மற்றுயர்மேருவெற்பைவளைத்ததுபின்புகண்டோம்
எற்றியவாதிறசெய்தவிவ்வண்ணமின்றுகண்டோம்
உற்றபேருலகிலுன்னையொப்பவருண்டோவன்றே.

இ - ள். சுற்றப்பட்ட மந்தரமலையைச்சுழலும்படி செய்ததை அன்றேகண்டேம். உயர்ந்த மேருவெற்பை வளைத்ததைப் பின்புகண்டேம். அடித்தவாதத்திற் செய்த இத்தன்மையை இன்றைக்குக் கண்டேம். பெருமைபொருந்திய உலகத்திலே உன்னை யொப்பாரில்லை எ - று.

மந்தரமத்துச் சுழலற்கும் மேருவளைதற்கும் பாம்பேதுணையாயிற்று என்பது தானே போதரும். (௧௩)

தனிப்பணியரசேயுன்றன்றலையில்வாழுலகமெல்லாம்
இனிச்சிறுகணத்தினுள்ளேயில்லையென்றாகுமந்தோ
மனத்தினிலருள்சுரந்துமல்கியபணத்திலொன்றைக்
குனித்தினியொதுக்கவேண்டுங்குவலயபப்பைக்கவென்றார்.

இ - ள். ஒப்பற்ற சர்ப்பராசனே உன்னுடைய தலையினாற் றாங்கப்பட்டு வாழுகின்ற உலகமெல்லாம் இனி ஒரு சிறுகணப்பொழுதினுள்ளே அழிந்துவிடும். ஐயோ! உலகத்திலுள்ளாருய்யும் வண்ணம் மனத்திற் கிருபை சுரந்து பரந்த படங்களிலொன்றை வளைத்து இப்பொழுதே ஒதுக்கல்வேண்டும் என்றார்கள் எ - று. (௧௪)

அம்மொழிகேட்டபின்னரடலராக்குலத்துவேந்துந்
தம்மதுபணத்திலொன்றைச்சற்றொதுக்கிடவேகண்டு
பொம்மெனப்பலத்தான்மோதிப்பொறகிரிச்சிகரத்தொன்றைத்
தெம்மலிபவனன்றள்ளித்தென்றிசைக்கடலில்வீழ்த்தான்.

இ - ள். வலிமையையுடைய சர்ப்பகுலராசனும் அந்த வார்த்தையைக் கேட்டபின் தன்னுடைய படங்களிலொன்றைச் சற்றே ஒதுக்க அதனோடு பகைநிறைந்த வாயுபகவான் பார்த்து விரைந்து மேருமலையின் கொடுமுடியிலொன்றைத் தன் பலத்தாலடித்துத் தள்ளித் தென்றிசைக்கணுள்ள கடலின்கண்ணே வீழ்த்தினான் எ - று. (௧௫)

ஒண்டருமிரட்டிமுப்பான்யோசனைவிசாலமாகி
அண்டியோசனைதானீளமைம்பதிற்றிரட்டியாகி
மண்டியபுரிசையேழாய்வாயில்களெட்டதாகி
திண்டருமொன்பான்கோடிசிவாலயந்திகழ்வதாகி.

இ - ள் மேன்மையத்தருகின்ற அறுபது யோசனை விசாலமுடையதாயும் நூறு யோசனைபொருந்திய நீளமுடையதாயும் நெருங்கிய ஏழு மதில்களை உடையதாயும், எட்டு வாயில்களை உடையதாயும், திண்மைபொருந்திய ஒன்பதுகோடி சிவாலயம் விளங்கப் பெறுவதாகியும் எ - று. (௧௬)



ஆடகத்தமைத்தபித்தியகப்புறம்புறப்புறங்கண்
மேடகத்தெற்றிமாடமிளிர்மணிவிமானகூடம்
பாடகப்புறந்தாட்கிள்ளைப்பனிமொழிப்பவளவாயார்
நாடகத்தரங்கந்துன்றுநனிநெடுவீதிகண்ணி.

இ - ள். பொன்னாற்செய்யப்பட்ட சுவர்பொருந்திய அகப்புறமும் புறப்புறங்களில் உயர்ந்த இடத்தையுடைய திண்ணைபொருந்திய மாடங்களும் விளங்குகின்ற இரத்தினத் தொழிலமைந்த விமான மண்டபங்களும் பாடகத்தையணிந்த புறவடியையும் கிளியின் மொழிபோலும் இனியமொழியினையும், பவளம்போலும் வாயினையுமுடைய பெண்களுடைய நாட்டியசாலைகளும் நெருங்கிய மிகநெடிய வீதிகளைப் பொருந்தியும் எ - று. (௧௭)

காண்டகுமிடங்கடோறுங்கலிகைவாயவிழ்ந்தவிழ்ந்து
பூண்டதேன்றிவலைசிந்திப்பொன்னிறப்பராகந்தெள்ளும்
நீண்டவான்கற்பகத்தினீழலஞ்சூழன்மேவி
ஈண்டருமிலங்காத்தீபமீழமாயிசைந்ததன்றே.

இ - ள். பார்க்குமிடங்கடோறும் மொட்டுகள் வாய்விண்டலர்ந்து உள்ளே கொண்டிருந்த தேன்றுளிகளைச் சிந்தி பொன்போலுந் நிறத்தையுடைய மகரந்தப்பொடிகளைத் தெள்ளுகின்ற நீண்ட சுவர்க்க கற்பகத்தின் நீழலில் நீராற் சூழுதலைப்பொருந்தி ஈண்டிய அரிய இலங்கைத்தீவானது ஈழமென்னும் பெயருடையதாய் இசைவுற்றது எ - று.

கடலினடுவே தோன்றியதனால் இலங்கையெனவும் பொன்மலையின் ஒரு கொடுமுடி வீழ்ந்துண்டானமையால் ஈழமெனவும் பெயர்பெற்றது. இலங்கை - ஆற்றிடைக்குறை. ஈழம். பொன், இலங்கை என்பதற்குத் தக்ஷிணகைலாச புராணகாரர் வேறுகூறினர். (௧௮)

அப்பதிபதனிற்பச்சையணிமணிபடகதாகத்
துப்புறுமுத்தம்வல்சிசொன்னவான்கலத்திற்சேர்த்தி
குப்புறவண்டலாடுங்கோதையர்குழாங்களென்று
மெப்பதிபதற்கொப்பாமென்றியம்பிடுந்தகைமைத்தம்மா.

இ - ள். அந்தப்பதியினிடத்தே மகளிர் கூட்டங்கள் அழகிய மரகத இரத்தினங்கள் இலைக்கறியாக மேன்மைபொருந்திய முத்துக்கள் சோறாக பெரிய பொற்பாத்திரத்திற் சேர்த்தி குதித்து வண்டல் விளையாட்டைச்செய்யுமாயின் அந்தப்பதிக்கு சமானமென்று சொல்லப்படுந் தகைமையையுடையது எந்தப்பதி எ - று. (௧௯)

சுந்தவான்கதிரினோடுதூமணிக்கதிருந்தோய்வுற்
றெத்திசைகளினுமேறவிரும்பகற்போதுமல்கும்
நத்தமுமிந்திரநீலநகையிருட்பிழம்புங்கூடி
வைத்தபேருலகிற்கேறமல்கிடுமிரவின்போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ - ள். சுத்தமாகிய சூரிய கிரணத்தோடு வலிமைபொருந்திய மாணிக்கரத்தினக் கிரணமுஞ்சேர்ந்து எல்லாத் திசைகளினுஞ் செல்லுதலால் பெரியபகற்காலம் பூரணமாகும். இருளும் இந்திரநீல ரத்தினத்தின் ஒளியாகிய இருட்பிழம்புங்கூடி வைக்கப்பட்ட பெரிய உலகிற் செல்லுதலால் இராக்காலம் நிறைவு பெறும் எ - று. தூ - வலிமை. (உ0)

காடெலாங்களிநல்யானைகரையெலாம்பவளக்குப்பை
நாடெலாமிரத்னராசிநகரெலாம்நல்லோர்சங்கம்
வீடெலாஞ்செம்பொற்கூரைவெளியெலாஞ்செந்நெற்குன்றங்
கோடெலாம்மஞ்ஞைபீட்டம்குழியெலாங்கழுநீர்ப்போது.

இ - ள். காடுகளெங்குங் களிப்பையுடைய நல்லயானைகளும், கடற்கரையெங்கும் பவளக்கூட்டமும், நாடுகளெங்கும் இரத்தினசங்கமும், நகரெங்கும் பெரியோர்கூட்டமும், வீடெங்குஞ் செம்பொற்கூரையும், வெளியிடமெங்குஞ் செம்மையாகிய நெற்மலையும், கோடெங்கும் மயிற்கூட்டமும், குழியெங்கும் கழுநீர்ப்பூவும் தங்கும் எ - று. (உக)

காவெலாம்மதனபாணங்கரையெலாஞ்சங்கச்சங்கம்
பூவெலாம்வண்டின்சாலம்புறவெலாம்நிரையினீட்டம்
மாவெலாமன்னக்கூட்டம்மலையெலாங்காளமேகம்
நாவெலாமமிர்தகீதநதியெலாமுதுநீர்த்தீர்த்தம்.

இ - ள். சோலையெங்கும் மன்மதபாணங்களும், நீர்க்கரையெங்கும் கூட்டமாகிய சங்குகளும், பூவெங்கும் வண்டின் கூட்டமும், முல்லைநிலமெங்கும் பசுக்கூட்டமும், வயல்களெங்கும் அன்னத்தொழுதியும், மலையெங்குங் கரியமேகமும் அங்குள்ளார் நாவெங்கும் அமிர்தம்போ லினிமைதருங் கீதமும், நதிகளெங்கும் பாவந்தீர்த்தல் முதிர்ந்த நீராகிய தீர்த்தமும் தங்கும் (உஉ)
மா - வயல்.

தண்ணமர்சாலிமுத்துந்தடங்கடலிப்பிமுத்தும்
வண்ணவொண்பணிலமுத்தும்வரையாறுவேலமுத்தும்
கண்ணமர்கரும்பின்முத்துங்கனமஞ்சின்றமுத்தும்
வெண்ணிலவில்லாப்போதுமிகுநிலாக்கொழிக்குமன்றே.

இ - ள். குளிர்ச்சிதங்கிய நெல்லா லீனப்பட்ட முத்தும் விசாலம்பொருந்திய கடலின்கண்தங்கிய சிப்பியா லீனப்பட்ட முத்தும் அழகிய ஒள்ளிய சங்குகளா லீனப்பட்ட முத்தும் மூங்கிலினீங்காத அசைவையுடையமுத்தும் கணுப்பொருந்திய கரும்பிலீனப்பட்ட முத்தும் விண்முகிலாலீனப்பட்ட முத்தும் சேர்ந்து வெண்மையான சந்திரிகையில்லாத காலத்தும் மிக்கசந்திரிகையைப் பொழியும். எ - று. (உங)

பணிலம்வெண்டிரையினார்ப்பப்பவளமுந்தவளமுத்தும்
மணிகளுஞ்சாந்தும்பூவும்மாலையும்பிறவும்வேய்ந்தும்
திணிமதிக்குடைகவித்துத்திரைக்குழாங்கவரிகாட்ட
அணிமணிவீதிதோறுமாழியுமுலாவுமாமால்.



இ - ள். சங்குகள் வெள்ளியதிரைபோல ஆரவாரிக்க பவளத்தையும், வெண்மையான முத்தையும், இரத்தினங்களையும் சந்தனத்தையும் விரிபூக்களையும் மாலைகளையும் பிறவற்றையுந்தரித்து நெருங்கியசந்திரனாகிய குடையைக் கவித்து திரைக்கூட்டத்தைச் சாமரங்கள்காட்ட அழகிய இரத்தினங்களையுடைய வீதிகள்தோறும் சமுத்திரமும் பவனிவரும். எ - று.

வீதியிலே வரும்திருவிழாவோலக்கம் சமுத்திரம் போலிருந்தது என்பது கருத்து. (உச)

கொஞ்சியகிள்ளைமென்சொற்கோதையர்சிலம்பினார்ப்பும்
வஞ்சியின்காஞ்சியார்ப்பும்வாயறாத்தமிழினார்ப்பும்
விஞ்சியமள்ளரார்ப்பும்விழாவெழுமுழாவினார்ப்பும்
அஞ்சிறைவண்டினார்ப்புமன்றியோராரர்ப்புமின்றால்.

இ - ள். கொஞ்சுகின்ற கிளிமொழிபோலும் மென்சொற்களையுடைய பெண்களது பாதசிலம்பினாரவாரமும், அவர்களிடையிற்கட்டிய எண்கோவை மணியினாரவாரமும், உண்மைநீங்காத தமிழினாரவாரமும், மிகுத்த உழவரினாரவாரமும், திருவிழாவெழுப்புதற்கென அடிக்கப்படுகின்ற முழவப்பறையினாரவாரமும் அழகிய சிறகுகளையுடைய வண்டினாரவாரமு மல்லாமல் வேறோராரவாரமு மங்கேயில்லை. எ - று. (உரு)

தெளிவுறுகிரணக்கற்றைச்செய்மணிப்பத்திசேர்ந்து
குளிர்புனல்நதிகளெல்லாங்குருதியினாறுபோலு
மொளிர்தருமிப்பியீன்றவொண்ணிறத்தவளமுத்தின்
வெளிநிலாவிங்கியுப்புவேலைபாலாழியொக்கும்.

இ - ள். அங்குள்ள குளிர்ந்த நீரையுடைய நதிகளெல்லாம் தெளிந்தகிரணக்கூட்டத்தையுடைய மாணிக்கரத்தின வரிசையோடு சேர்ந்திருத்தலால் இரத்தநதியையொக்கும். உப்புச்சமுத்திரம் விளங்குகின்ற சிப்பியி லீனப்பட்ட ஒள்ளிய இரத்தினமாகிய முத்தினது வெள்ளிய நிலாக்கிரணத்தினால் மிகுந்து பாற் சமுத்திரத்தை யொக்கும். எ - று. (உசா)

ஊட்டுசெஞ்சுடர்மணியினைத்தடியெனவுகந்து
காட்டுந்தம்மிருபதங்களாற்கவர்கின்றகங்கந்
தோட்டுத்துண்டங்கொண்டுண்பதற்காமெனத்துணிந்து
கூட்டில்வைத்தனபறந்தனவாதரங்கூர்ந்து.

இ - ள். ஊட்டப்பட்ட செவ்வொளியையுடைய இரத்தினத்தை இறைச்சியென்று கருதிவிரும்பி காட்டினுள்ளே தம்முடைய இருபாதங்களினாலும் கவருகின்ற பருந்துகள் திரண்டமூக்கினாலெடுத்து உண்பதற்கு ஏற்றதாகுமென்று நிச்சயித்துத் தங்கள் கூட்டினிடத்தே வைத்துக் களிப்பு மிகுந்து பறக்கும். எ - று.

பருந்துகள் செம்மணிகளை இறைச்சியென்று மயங்குதலால் இது பிராந்திமதாலங்காரம். (உஎ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைகிடந்தவொள்வளவயற்றௌியருவரம்பின்
கிடைகிடந்தசங்குதவியமுத்தெலாங்கண்டு
புடைகிடந்ததம்மண்டங்கடம்மொடுபுகட்டி
யடைகிடந்தனசிறையகத்தடக்கியேயன்னம்.

இ - ள். அன்னப்பறவைகள் மதகுகிடக்கப்பெற்ற ஒள்ளிய வளங்களை யுடைய வயலின் சேறுநீங்காத வரம்பினிடத்தே கிடக்கப்பெற்ற சங்குகளாலீனப்பட்ட முத்துக்களெல்லாவற்றையும் தமது முட்டைகளென வுணர்ந்து பக்கத்திற்கிடக்கின்ற தம்முட்டைகளோடு புகுத்தி தம்சிறகுகளிடத்தே அடக்கி அடைகிடக்கப்பெறுவன. எ - று. (௨௮)

மாறில்பாளைகண்மலரிளங்கமுகினல்வாளை
யேறுபாய்தரவயலெலாமுகுவனவிளங்கா
யாறுபாய்வதென்றதிசயபெனக்கரும்பாலைச்
சாறுபாய்தரவளர்வனகழனியிற்சாலி.

இ - ள். சமானமில்லாத பாளைகள் கமழுகின்ற இளமையான கமுகினிடத்தே நல்லவாளைமீனேறுகள் பாய்தலினால் அவற்றினிளங்காய்கள் வயலெங்கும் சொரியப்படுகின்றன. ஆலையினின்று வருங் கருப்பஞ்சாறானது ஆறுபாய்கின்றதென்று அதிசயமுண்டாகும்படி பாய்தலினால் வயலினெல்லுக்கள் வளாவடைகின்றன. எ - று. (௨௯)

இன்னலின்றியேயிணர்த்ததாளிப்பனையெவையும்
பொன்னின்வீதிபுட்பொலிநிலைத்தேர்க்குழாம்போலுங்
கன்னிமார்குழல்கூந்தலங்கமுகுகள்காட்ட
வன்னபாளைகளளிப்பனகமுகுகளனந்தம்.

இ - ள். இடையூறின்றி விரிந்த தாளிப்பனைமரங்களெல்லாம் பொன்மயமாகிய வீதியினுள்ளே செய்யப்பட்டு பொலிவுபெற்ற கூட்டமாகிய நிலைத்தேர்களையொக்கும். அளவில்லாதகமுகுகள் மகளிருடைய குழலுப்பமைந்த கூந்தலினழகைக் காட்டும்படி அக்கூந்தல்போன்ற பாளைகளை ஈனுகின்றன. எ - று.

வண்டரிக்கப்படுதன் முதலிய இடையூறுகளில்லாதன என்பார் இன்னலின்றியேயென்றார். (௩௦)

கண்ணிலாவியகறுந்தொடைக்காளையர்தங்கள்
வண்ணயாதர்கள்வதனமேற்புணர்கின்றவைரம்
மண்ணிலாவியவெண்ணிறக்கலைமதியெழுச்சி
யுண்ணிலாவியபுனலிடைக்கண்டபின்றீப்பார்.

இ - ள். தேன்விளங்குகின்ற நறியமாலையையுடைய ஆடவர்கள் தங்களுடைய அழகிய பெண்களது முகத்தின் மேற்கொண்ட பெருங்கோபத்தை பூமியில் வெண்மையான நிறத்தையுடைய பூரண சந்திரோதயத்தை அவ்விடத்தே விளங்குகின்ற நீரினுள்ளே கண்டுநீக்குவார் எ - று.



ஒருவர் விரும்புகின்ற ஒருபொருள் கிடையாமையினால் அப்பொருண்மேல் வைத்த கோபமானது அதுபோன்ற வேறுபொருள் பெற்ற இடத்து நீங்கிவிடும். அதுபோல ஆங்குள்ள ஆடவர்களும் தங்களோடுபுலந்து பாராது திருப்பிய பெண்கள்முகத்தின்மேல் வைத்த கோபத்தை அம்முகம்போன்ற சந்திரனைக்கண்டு நீக்குவார்கள் என்க. (௩௧)

மஞ்சின்முத்தமுபரங்கையின்மரகதமணியும்
விஞ்சுசெம்பொனும்வலவயிற்செம்மணிவேய்ந்தும்
மஞ்சொற்கம்பலையாற்றினன்னீலமுமவிர்ந்தும்
பஞ்சவன்னமேயிரவினும்பகலினுமபயிற்றும்.

இ - ள். மேகத்தின் முத்தினையும் குளத்தின்கணுள்ள மரகதரத்தினத்தையும் மிக்க செம்பொன்னையும் அங்குள்ள மாணிக்கத்தையும் தரித்துநீராடும் மகளிருடைய அழகிய சொற்றௌியையுடைய ஆற்றினிடத்தே நல்ல நீலரத்தினம் விளங்கப்பெற்றும் அவ்விலங்கைப்பதியானது இராவிலும் பகலினும் பஞ்சவர்ணத்தைக் காட்டிக்கொண்டிருக்கும் எ - று. (௩௨)

இதத்தசெந்தமிழறிவினாற்சங்கரையேய்ப்பார்
விதத்தயாழிசைப்பாடலால்விஞ்சையர்கிகர்வார்
குதித்ததேன்சுவைக்கவிதையாற்குறுமுனிபோல்வார்
மதித்தநீர்வளப்பண்ணைசூழப்பதிமாக்கள்.

இ - ள். மதிக்கப்பட்ட நீர்வளமுடைய வயல்சூழ்ந்த அவ்விலங்கையில் வாழும் ஆடவர்கள் இனியதான செந்தமிழ்க் கல்வியறிவினால் சங்கப்புலவர்களை யொப்பார்கள். பலவிதமான யாழிசையைப் பாடும் வலிமையினால் வித்தியாதரரை ஒப்பார்கள். குதித்துப் பாய்கின்ற தேன்போலும் இரசத்தையுடைய கவிகளைச் செய்யும் புலமையினால் அகத்தியமுனிவரை ஒப்பார் எ - று. (௩௩)

உருத்தசெஞ்சிலைத்தொழிலினிற்பார்த்தனையொப்பார்
கரித்தவெஞ்சுடர்வாளினிலபிமனைக்கடுப்பார்
தரித்தநல்லறப்பகுதியிற்றருமனைத்தகுவார்
வரிக்கொழுங்கயற்பண்ணைசூழப்பதியாக்கள்.

இ - ள். இரேகைபொருந்திய கொழுவிய கயன்மீனையுடைய வயல்சூழ்ந்த அவ்விலங்கைப்பதியில் வாழும் ஆடவர்கள் கோபிக்கின்ற நல்லவிற்போரினால அருச்சுனனை ஒப்பார்கள். காய்ச்சப்பட்ட வெவ்விய ஒளியையுடைய வாட்போரினில் அவன்மகனாகிய அபிமன்னுவை ஒப்பார்கள். நல்ல தருமப்பகுதியிலே தருமபுத்திரரை ஒப்பார்கள் எ - று.

பார்த்தன் என்பது பிருதையின் மகன் எனப் பொருள்பட வந்த தத்திதாந்தபதமாதலின்: குந்தியைப் பிரதையெனல் பொருந்தாது. 'விசயனேவிசயன்விற்போர்'' என்பதுந் தெளிக. (௩௪)

ஐவகுத்தனபஞ்சின்மெல்லணைமிசையடவார்
மைவகுத்தசெம்பஞ்சினை நூபுரக்கால்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வனப்புறுகாளைபர்புலவியுள்விரும்பித்
தைவரச்சிவப்பேறுவமலர்க்கரதலங்கள்.

இ - ள். ஐந்துவகையாகச்செய்த பஞ்சினும் மெல்லிய சயனத்தின்மேல் பெண்களுடைய கையினாற் செம்பஞ்சுக் குழம்பூட்டப்பட்ட இரண்டாகிய சிலம்பையணிந்த பாதங்களைச் சரீரகாந்தியையுடைய ஆடவர்கள் புலவியி னுள்ளே விரும்பித் தடவ அவர்கள் கைத்தலங்கள் அக்குழம்பினாற் சிவப் படைகின்றன எ - று.

சயனம் ஐந்தாவன - "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணமு றுதூவிசையையோரைந்து" என்க. (௫௫)

இறைகளுள்ளனவங்கையினங்குலியென்றுங்
குறைகளுள்ளனபங்கையர்மருங்குகள்கூறு
மறைகளுள்ளனகெய்ம்மலிவெள்ளிகண்பன்னுஞ்
சிறைகளுள்ளனவண்டலைசைதவர்புள்ளின்றிரள்கள்.

இ - ள். அழகிய கையினுள்ள விரல்களே வரைகளையுடையன. பெண் களுடைய இடைகளே எப்பொழுதும் குறைவுகளையுடையன. நெய்நிறை ந்த வேள்விகளே சொல்லப்படுகின்ற வேதங்களையுடையன. சிறந்த தசை யைக் கவரும் பறவைக்கூட்டங்களே நிலைபெற்ற சிறகுகளையுடையன.

*விரல்களே சிறுமையையுடையன எனவும், இடைகளேகுறைவுகளுடை யன எனவும், யாகங்களே மறைவுடையன எனவும் பறவைகளே மறிய லுடையன எனவும் சிலேடைவகையால் ஒருபொருள்பட்டு அவ்விலங்கைப் பதியிலே விரலொழிந்த மற்றையனவெல்லாம் குறைவில்லாதன எனவும் யாகங்களொழிந்த மற்றையனவெல்லாம் வஞ்சகமில்லாதன எனவும் பற வையொழிந்த மற்றையன வெல்லாம் மறிவில்லாதன எனவும் ஒழித்துக் காட்டி ஒழிப்பணியாக இக்கவியைக்கூறினார். இறையென்பதற்கு இறுத ல் எனக்கூறினும்பொருந்தும். (௫௬)

கொலைபடைப்பனதண்ணளியரம்பைகள்கூர
அலைபடைப்பனவெண்டிரைவேலைசளறைவார்
நிலைபடைப்பனவெண்ணிறப்படாகைகணிலமே
விலைபடைப்பனவறுமையும்பொய்ம்மொழியெவையும்.

இ - ள். குளிர்ந்த பெரிய வாழைகளே கொலைத்தொழிலைப் பெற்றுக் கொள்வன. வெண்மையாகிய திரைகளையுடைய சமுத்திரமே மிகவும் அ லையைப் பெற்றுக்கொள்வன. வெண்மையாகிய நிறத்தையுடைய கொடிக ளே அறைகின்ற நீண்ட நிலையைப் பெற்றுக்கொள்வன பூமியில் வறுமையும் பலவகைப் பொய்மொழிகளுமே இன்மையைப் பெற்றுக்கொள்வன எ - று.

இக்கவியும் வாழைகள்வருத்தத்தை அடைவன எனவும், சமுத்திரங்க ளே அலையை அடைவன எனவும், கொடிகளே அடிபடும் நிலையை அ டைவன எனவும், வறுமை பொய் முதலியன இலையெனப் படுவன என்றும்

*கடியனகச்சிறைகட்டப்பட்டன! எனச்சிந்தாமணியிலும் இங்ஙனம் பொருள்படக் கூறினதுங் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருள்பட்டு இவையொழிந்த மற்றையன வருத்தத்தையும், அலையையும், அடிபடுதலையும், இலையெனப்படுதலையும் அடையா என ஒழிப்பணியாதல் கா ண்க. கொலை - வருத்தம். நளி - பெருமை. தண்ணளிலையாம்பை என்பதும் பாடம். (௫௭)

கற்றைவெஞ்சுடர்க்கதிரவன்காய்வதுங்கறங்குங்
கொற்றவொள்வளியலைப்பதுமன்றியேகுடிக்குப்
பற்றுகள்வர்கண்முதலியபயங்களும்படிமேல்
எற்றுமன்னர்கணடாத்துகோற்கொடுமையுமிலவே.

இ - ள். தொகுதியாகிய வெவ்விய சுடரையுடைய சூரியன் காய்வதும், சுழலுகின்ற வெற்றிபொருந்திய சிறந்த காற்றலைப்பதுமேயல்லாமல் குடி களுக்குப் பொருந்திய கள்வர் முதலியபயங்களும், பூமியின்மேற் கொலைசெ ய்யும் ராசாக்கள் நடத்துகின்ற கொடுங்கோன்மையும் இல்லை எ - று.

கள்வர்முதலிய பயமென்றது, கள்வர் ஆறலைப்பார், புலி, கரடி முதலி ய உட்பகைகளை. அவைகளைப் 'பல்குழு" என்னுங் குறட்குப் பரிமேலழக ர் உரைத்ததிற் காண்க. (௫௮)

அன்னநல்வளமாங்கமைந்தப்பதியநந்தம்
பன்னுவானவர்வாழமராவதிபதியும்
இன்னிலின்மையவளகையம்பதியுமேயென்ன
நன்னரெய்தியபுகழுடன்சிறக்கின்றநாளில்.

இ - ள். அவ்விலங்கைப்பதியானது மேற்சொல்லப்பட்ட அத்தன்மை யான சிறந்த வளங்களை ஆங்கே பொருந்தி அளவற்ற தேவர்கள் வசிக்கின் ற சுவர்க்க உலகமும், துன்பமில்லாத அளகாபுரியும் என்று சொல்லும்படி நன்மையடைந்து கீர்த்தியுடன் சிறக்கின்ற நாள்களில் எ - று. (௫௯)

இலங்கைச்சருக்கம்முற்றிற்று.

ஆக விருத்தம் - ௫௯.

## கங்கைச்சருக்கம்.

உரைசெய்நல்வினை தீவினையிரண்டிற்குமுடலாய்த்
திரைகண்மாறெனப்பிறந்திறந்துழல்வதுதீரக்
கரைசைநன்னகர்வாழ்பிரான்கழலிணைகருதார்
வரைவின்மண்டலத்தென்செய்வாரைம்புலமாக்கள்.

இ-ள். சொல்லப்படுகின்ற நல்வினை தீவினை என்னும் இருவினைப்பயன்க ளை அனுபவித்தற்கு உடம்பைப் பெற்று வீசிதரங்க நியாயமாகப் பிறந்தும் இறந்தும் சுவர்க்க நரக மத்திய உலகங்களில் உழலுவது தீரும்படி கரை சைமாநகரின்கண் எழுந்தருளி இராநின்ற சிவபிரானுடைய திருவடிகளை

ண்டையும் கருதாராகிய பஞ்சப் புலன்களையுடைய மனிதர் பூமியினிடத்து யாதுசெய்வார்!

வீசிதரங்கநியாயமாவது திரைபாய்வதுபோல மாறிமாறிவருதல். வீசி - திரை. தரங்கம் - பாய்வது. "புண்ணியத்தாற் பாவத்தாற் பொன்னாடு நரகு தவர போக்குவரவுடையார்" என்றார் பசுவிளக்க நூலார். (௧)

அரும்பியகொங்கைப்பச்சையணங்கினைப்புனிதனார்தம்
மருங்கமர்பாணிபற்றிமணவினைமுடித்தல்காண
இருஞ்சுரர்முனிவர்சித்தரியக்கர்கந்தருவரேனோர்
விரும்பியகைலைமீதுவேண்டினரீண்டினரால்.

இ - ள். அரும்பிய ஸ்தனத்தையும், பச்சைநிறத்தையுமுடைய உமாதேவியாரைப் பரமசிவன் தம்மிடத்தே பொருந்திய திருக்கரங்களாற் பிடித்து மணவினைமுடிக்கும் சிறப்பைக் காணும்பொருட்டுப் பெரியதேவரும், முனிவரும், சித்தரும், இயக்கரும் கந்தருவரும் பிறரும், விரும்பப்பட்ட திருக்கைலாசமலையிலே விரும்பி நெருங்கினார்கள் எ - று. (௨)

இப்பரிசீண்டுவானோரெழிற்குறுமுனியைநோக்கி
செப்பியதேவர்யாருஞ்சேரவந்தீண்டினார்கள்
தப்பறும்வடாதுபூமிதாழ்ந்திடுந்தெனாதுதாலம்
ஒப்பறவுயரும்வேறிங்குறுதிநீயன்றியுண்டோ.

இ - ள். இவ்விதமாக நெருங்கிய தேவர்கள் அழகிய அகஸ்தியரைப் பார்த்துச் சொல்லப்பட்ட தேவர்கள் யாவரும் ஒருங்கே வந்து நெருங்கினார்கள். ஆதலால் குற்றமற்ற வடக்குள்ளதாகிய பூமி தாழவடையும், தெற்குள்ளதாகிய பூமி சமானமில்லாமலுயரும். இவற்றைச்சமப்படுத்துதற்கு இங்கே உறுதியாவார் நீரேயன்றி வேறு யாருமில்லை எ - று. (௩)

அஞ்சொலார்கலைகள்வல்லவருட்குறுமுனியேநீபோய்
எஞ்சலில்பொதியமீதிலிருந்தனையாகி லின்னும்
விஞ்சைபர்கோடிகோடி விண்ணவர்குழுமினாலும்
சஞ்சலமின்றிப்பாருஞ்சமதலமாகுமன்றே.

இ - ள். அழகிய சொற்கள் பொருந்திய சாஸ்திரங்களில் வன்மைபெற்ற அருளையுடைய அகஸ்தியரே! நீர் சென்று குறைவற்ற பொதிய மலையின்மே லிருந்தீராயின், இன்னும் பலவித்தியாதரரும் பலதேவர்களும் இங்கே வந்து கூடினாலும்பூமியும் ஏற்றிழிவாகிய அசைவின்றிச் சமதலமாயிருக்கும்.

கோடி - பல என்னும்பொருட்டு. ஏற்றிழிவு - உயர்வு தாழ்வு. (௪)

ஆதலானீயுமேகியாரமாமலையின்மீது
நீதறவாழ்தியென்றுசெப்பிடமுனிவன்றானும்
பேதுறுநெஞ்சினோடுபெரிதிடரெய்தியந்தோ
நாதனார்மணங்காணாதுநாஞ்செல்வதெங்ஙனென்றான்.



இ - ள். ஆதலால் நீருஞ் சென்று பொதியமலையின் மேலே தீமையில்லாமல் வாழக்கடவீரென்று சொல்ல, அகஸ்தியமுனிவரும் சிவபிரானுடைய திருமணக்கோலத்தை தெரிசனஞ் செய்யாமல் வருத்தம் பொருந்திய மனத்தோடு பெரிதும் துன்பமெய்தி ஐயகோ! நாம் போவது எப்படி என்றார்; எ - று.

பேது - வருத்தம். (௫)

எண்ணியகலைகளெல்லாமேகமாய்த்திரண்டதென்ன
நண்ணியமுனிவனுவினவிற்றுரைக்குள்ளநெக்கிப்
பெண்ணமுதனையாள்செங்கைபிடித்தவக்கோலத்தோடுந்
திண்ணமாய்வருவோமென்றுதேவர்கோன்செப்பக்கேட்டு.

இ - ள். எண்ணப்பட்ட சாஸ்திரங்களெல்லாம் ஒன்றாய்க் கூடினாற்போல வந்த அகஸ்தியமுனிவர் நாவினாற்சொல்லிய அன்புரையைக்கேட்டு தேவாதிதேவராகிய சிவன் மனம்நெகிழ்ந்து உமாதேவியாருடைய திருமணக்கோலத்தோடு உமக்குக்காட்ட நிச்சயமாய் வருவோமென்று திருவாய்மலர்ந்தருளக் கேட்டு எ - று. (௬)

வேறு.

உளமுருகுஞ்செயல்கண்டினியுறுதியிதென்றுமகிழ்ந்துடல்
புளகமெறிந்துபெரும்புனல்புனைவிழிநின்றுசொரிந்திட
வளமிகுகொன்றைசெழும்புனன்மதிபொதியுஞ்சடையெந்தையை
அளவறவந்தனைசெய்திறையருள்விடைகொண்டுமகிழ்ந்தனன்.

இ - ள் மனமுருகுஞ்செயல்கண்டு இனி இதுவே உறுதியென்று மனமகிழ்ந்து உடம்பில் மயிர்சிலிர்த்து இரண்டுகண்களும் மிகவும் நீரைச் சொரிய வளம்மிகுந்த கொன்றை மாலையையும், கங்கையையும், சந்திரனையும், அடக்கிய சடையையுடைய எம்பெருமானை அளவில்லாத வந்தனை செய்து அவர் அருளிச்செய்த அனுமதியைப்பெற்று மகிழ்ச்சி அடைந்தார்.

விரைகமழ்தண்டுகரண்டிகைமிகுசமிதங்குசைகுண்டிகை
மருவியவங்கைகவர்ந்துயர்மரவுரியொன்றுபுனைந்தரை
யுரமிசைமுஞ்சிவிளங்கிடவுபவிதநின்றுதுலங்கிட
நிரைதிருசெங்கையின்வெண்குடைநிழலிடவங்ஙனெழுந்தனன்.

இ - ள். சிறந்தவராகிய அகஸ்தியமுனிவர் வாசனை பரிமளிக்கின்ற தண்டினையும், பூங்குடலையையும், மிக்கசமித்துக்களையும், தருப்பையையும், கமண்டலத்தையும் பொருந்திய திருக்கரத்திலெடுத்து உயர்ந்த மரவுரி ஒன்றை அரையிலணிந்து மார்பினிடத்தே மௌஞ்சிநாண் விளங்கவும் பூணூல் நின்றுவிளங்கவும் வரிசையாகக் கைகளிற்பிடிக்கப்பட்டு வெண்குடை நிழலைச்செய்யவும் அங்கே எழுந்தருளினார் எ - று.

முஞ்சி இருடிகள் மார்பிலணியும் ஒருவகைப்புல். அதனாலாயது மௌஞ்சி. உபவீதம் - விகாரம். கரண்டிகை - பூங்குடலை. அதனைக் கோயிற்புராணத்து 'காலம்பெறநீறணிமாமுனிநீர் கமழ்குண்டிகை தண்டு கரண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையுட் சாலும்பலபோது" என்பதனுரையிற் காண்க. (௮)

படியிலிறங்கிவிளங்கியபனிவரைதன்னைவலங்கொடு
துடியிடையம்பிகைகவம்பிகைதுணைமுலைசங்கரிநண்புறு
நடனவிதந்தருசங்கரர்நளினபதங்களிரண்டினின்
வழிவுநினைந்துயர்தென்றிசைவழியையடைந்துநடந்தனன்.

இ-ள். பூமியிலேயிறங்கிப் பிரகாசிக்கின்ற இமயமலையை வலங்கொண்டு உடுக்கையொத்த இடையையுடைய அம்பிகையும் கச்சுப்பொருந்திய இருதனங்களையுடையவளும் சங்கரியுமாகிய உமாதேவியார் நண்புகொள்ளும் நடனபேதங்களைத் தருகின்ற சிவபெருமானுடைய செந்தாமரைமலர்போலும் திருவடிகளிரண்டையும் நினைந்து உயர்ந்த தென்றிசையை நோக்கிச் செல்லும்வழியை அடைந்து நடப்பாராயினர் எ - று. (௯)

வரையுமருங்குயர்தண்டகவனமுநெடுந்திரைபொங்கிய
வாலையெனும்படிவிஞ்சியநதியுமதம்பொழிகுஞ்சர
நிரையுமடங்கலினங்களுநிறைபொறிவெம்புலியுஞ்சரி
சரிபுநெடுஞ்சுரமும்பயிறமிழ்முனிகண்டுகடந்தனன்.

இ - ள். பக்கத்திலுயர்ந்த மலைகளையும், தண்டகாரணியத்தையும் நீண்ட திரைமிகுந்த சமுத்திரமென்னும்படி, மிகுந்த நதிகளையும் மதசலத்தைப் பிலிற்றுகின்ற யானைவரிசைகளும் சிங்கக்கூட்டங்களும் நிறைந்தபுள்ளிகளையுடைய வெவ்வியபுலிகளும் சஞ்சரிக்கின்ற வழிகளையும் பெரியசுரங்களையும் தமிழ்பயின்ற அகஸ்தியமுனிவர் கண்டுகடந்தார் எ - று.
சரி - வழி. சுரம் - பாலைநிலம். (௧0)

வினைகளனந்தமுமந்தரவீடுதியனந்தமுமின்புறு
சுனைகளனந்தமுநந்துறைதுறைகளனந்தமும்வஞ்சகர்
மனைகளனந்தமும்வன்பிலவழிகளனந்தமுநின்றெதிர்
முனைகளனந்தமுநன்குறுமுனிவனெதிர்ந்துநடந்தனன்.

இ - ள். நன்மையுடைய அகஸ்தியமுனிவர் அளவில்லாத வினைகளையும், அளவில்லாத அந்தரவீடுகளையும், இன்பத்தை உதவிக்கின்ற அளவில்லாத நீர்நிலைகளையும், சங்குகள் தங்குகின்ற அளவில்லாத நதிகளையும், வஞ்சகர் தங்குகின்ற அளவில்லாத வீடுகளையும், அளவில்லாத வலிய பிலவழிகளையும், நின்று எதிர்க்கின்ற அளவில்லாத போர்களையும் எதிர்ப்பட்டு நடந்தார் - எ
வினைகளென்றது தீவினைசெய்பவைகளை - விடுதி - தங்குமிடம். (௧௧)

வருவழியின்கணெருங்கியபாதிருகசங்கமடங்கலு
நிரைதருகொம்புகிளைர்ந்திணர்நகழ்தளிர்கொண்டுதழைத் துயர்
விரைமலர்விண்டுசொரிந்துளமிகுகனிசிந்திவிளங்கிட
வருமுனிகண்டுமகிழ்ந்துறுகளியமுதுண்டுநடந்தனன்.

இ - ள். வருகின்றவராகிய அகஸ்தியமுனிவர் தாம்வருகின்ற வழிகளிலே நெருங்கிய மரக்கூட்டங்களெல்லாம் வரிசைபொருந்திய கொம்பர்கள் கிளைர்ந்தும், பூங்கொத்துகள்விளங்குகின்ற தளிர்களைக் கொண்டுதழைத்தும்,



உயர்ந்த பரிமளத்தையுடைய பூக்களை அலர்ந்துசொரிந்தும் தம்மிடத்தேயுள்ள மிக்க கனிகளைச் சொரிந்தும் பிரகாசிக்க அவற்றைக் கண்டு மகிழ்ந்து மிக்க களியென்னும் அமுதையுண்டு நடந்தார் எ - று.

களி - பெற்றதன்மேலுள்ள பற்று. மகீருகம் - மரம். பூமியிற் பிறத்தலென்னும்பொருட்டு. பூருகம் என்னும் சொல்லின்பிரதிபதம். பாரதத்தில் "வனமகீருகம்" எனப் பிரயோகித்திருத்தலுங் காண்க. (௧௨)

வேறு.

சென்றுமுனிவன்றிருக்கேதாரஞ்சேர்ந்து
கன்றிபுளங்குழைந்துநன்மாமறைநவிற்றி
நின்றதிருநீலகண்டர்நேர்பாதங்கும்பிட்டு
மன்றுளடித்தார்முடித்தமாகங்கைக்கரையடைந்தார்.

இ - ள். அகஸ்தியமுனிவர் இங்ஙனம் நடந்து திருக்கேதாரத்தை அடைந்து நன்மைபொருந்திய மனம் நெக்குருகி நல்ல பெரிய வேததுதிகளைச்சொல்லி அங்கே எழுந்தருளி இராநின்ற நீலகண்டேசுரரது ஒன்றோடொன்றொத்த திருவடிகளைக் கும்பிட்டு நடேசப் பெருமானால் சிரசிலணியப்பட்ட பெருமையையுடைய கங்காநதிக்கரையை அடைந்தார் எ - று.
நேர் - ஒன்றையொன்றொத்த. நேர்வளையென்பதற்கு நச்சினார்க்கினியார் உரைத்ததுங் காண்க. (௧௩)

பிறப்பறுக்குமக்கங்கைப்பிறங்குதுறைப்புனலாடிக்
கறைக்களத்தாரவிமுத்தங்கருத்தாரக்கைகுவித்து
மறித்ததிறல்விந்தநெடுமால்வரையின்வலியடக்கி
நறைச்சடையார்காளாத்திநன்மலையைநண்ணினன்.

இ - ள். தம்மிடத்தே ஸ்நானஞ்செய்தாருடைய பிறவிநோயை அறுக்கின்ற அந்தக் கங்கையென்கின்ற விளங்குகின்ற நதியிலே யுள்ள நீரிலே தீர்த்தமாடிக் காளகண்டராகிய சிவபெருமானுடைய அவிமுத்தநகரத்தை அன்புநிறைய வணங்கிச் சூரியன்முதலிய வானசோதிகளைச் செல்லவொட்டாது மறித்த வலிமையினையுடைய நெடிய பெரியவிந்தமலையின் வலிமையைக் கெடுத்துப் பின்பு பரிமளம்பொருந்திய சடையையுடையராகிய சிவபெருமானது பெரிய திருக்காளாத்திமலையை அடைந்தார் எ - று.

காளனும் அத்தியும் பூசைசெய்தலினால் காளாத்தியெனப் பெயர்பெற்றது. காளன் - பாம்பு. அத்தி - யானை. அவிமுத்தம் - காசி. (௧௪)

அப்பதியின்மதிக்கண்ணிபவிர்சடையானடிபோற்றி
எப்பதியுநிகரில்லாவெழிற்காஞ்சிநகரெய்தித்
தப்பறவேதிருவேகாம்பரநாதன்றாள்பணிந்து
செப்பியமார்கனற்குன்றுந்திருவதிகையுந்தொழுதான்.

இ - ள். அந்தத்திருக்காளத்தியி லெழுந்தருளி இருக்கின்ற சந்திரனாகிய மாலைவிளங்குகின்ற சடையையுடையராகிய கடவுளுடைய திருவடிகளைத் துதித்து எந்தப்பதியும் தனக்கிணையில்லாத பெருஞ்சிறப்பையுடைய கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞ்சிபுரத்தையடைந்து தவறில்லாமல் திருவேகாம்பரநாதருடைய திருவடிகளை வணங்கி மேன்மையையுடையதாகிய அருணசலமலையையும் திருவதிகையையும் அடைந்து வணங்கினர் எ - று.

சிவன் அக்கினிமலையாய் நின்றமையால் அருணசலத்தைக் கனற்குன்றென்றார். (௧௫)

வணங்குமுனிபெரும்பற்றப்புலியூரின்வந்தெய்தி
இணங்குலகந்துயர்நீங்கவெடுத்தொருதாணடமாடுங்
குணங்குலவும்பெருமானைக்கருத்துடனேகும்பிட்டுத்
தணந்துவிடற்கரிதானமனத்தினனாய்ச்சார்வுற்றான்.

இ - ள் இப்படிவணங்கிய அகஸ்தியமுனிவர் பெரும்பற்றப்புலியூராகிய சிதம்பரத்தை வந்தடைந்து பொருந்திய உலகத்தின் ஆன்மாக்கள் துன்பத்தினின்று நீங்கும் பொருட்டு ஒரு திருவடியைத் தூக்கித் திருநிருத்தம் செய்கின்ற தன்மை பொருந்திய நடேசப் பெருமானை அன்போடுங்கும்பிட்டு அவ்விடத்தை நீங்கிவிடுதற்கரிய மனத்தையுடையாராய்ச் சார்ந்தார்.

பஞ்சகிருத்தியம் ஆன்மாக்களுடைய இளைப்பொழிக்கும் காரணமாதலின் துயர்நீங்க என்று கூறினர். (௧௬)

கோட்டுலகத்தானந்தக்கூத்தாடும்பெருமானை
மீட்டிறைஞ்சிவிடைகொண்டுவிளங்கியதன்குண்டிகையு
ள்ட்டுபுனற்காவிரியின்கரையெய்தியெழின்முனிவன்
நாட்டிமையோர்புகழ்திருவாவடுதுறையைநண்ணினன்.

இ - ள். அழகிய அகஸ்தியமுனிவர் கோயிலாகிய சிதாகாசத்தில் ஆனந்தக் கூத்தாடும் நடேசப்பெருமானைப் பின்னும் வணங்கி அனுமதிபெற்றுக்கொண்டு தன்னுடைய விளங்கியகமண்டலத்துள்ளே சேர்க்கின்றநீராகிய காவிரியின்கரையையடைந்து மேனாட்டுள்ள தேவராற்புகழப்படுகின்ற திருவாடுதுறையை யடைந்தார் எ - று.

நாட்டிமையோரென்பதற்குப் பூசுரர் எனக்கொள்ளினும் பொருந்தும். அப்பொருட்கு நாடென்பதற்குப் பூமியெனவுரைக்க. (௧௭)

சேன்மேவுவிழிபங்காடிபாவித்திருவாரூர்
மான்மேவுமாடரவக்கிங்கிணிக்கான்மலர்வழுத்திப்
பான்மேவுகுருந்துறையும்பண்ணவர்தாள்பணிந்தேத்திக்
கான்மாறியாடுமரன்மாமதுரைக்கண்ணடைந்தான்.

இ - ள். அத்திருவாடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற மீன்போலுங்கண்ணையுடைய உமாதேவிபங்கருடைய திருவடிகளைத் துதித்து, திருவாரூர்சென்று அங்குள்ள சிவபெருமானுடைய ஆடுதற்கு ஒலிகொள்ளுகின்ற சிலம்பையணிந்த திருவடித்தாமரைகளைத் துதித்து அதன்பக்கத்தே பொருந்திய குருந்தமரத்தின் அடியிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித்துதித்து கான்மாறி ஆடிய சோமசுந்தரக்கடவுள் விளங்கிய மதுரைப்பதியை யடைந்தார் எ - று. (௧௮)



அக்கண்டன்றிருவிளையாட்டாடியசீராலவாய்ச்
சொக்கரடிமுடிசூடித்தூயதிருநெல்வேலி
மிக்கபுகழ்வேயின்றமுத்தர்விரைக்கழல்போற்றி
நக்கருறைதென்காசிநன்னகரிற்போயினன்.

இ - ள் அந்தக்காளகண்டர் திருவிளையாடலைச்செய்த திருவாலவாயென்னும் மதுரையிலிருக்கின்ற சொக்கநாதராகிய அவருடைய அடிகளை முடிபொருந்தவணங்கி அப்பால் பரிசுத்தமாகிய திருநெல்வேலி சென்று அங்குள்ள மிக்ககீர்த்திபொருந்திய வேணுவனநாதருடைய வாசனைபொருந்திய திருவடிகளை வணங்கி நக்கர் இருக்கின்ற தென்காசிமாநகரத்தை அடைந்தார் எ - று. (௧௯)

காசிவருகண்டக்கறைவிச்சுவநாதன்
றேசுமலர்ப்பதங்கள்சிந்தையுறச்சிந்தித்துப்
பூசுரரெண்கன்யாகுமரியெனும்புனலாடி
வீசுமிளந்தென்றல்விளைபொதியமேவினன்.

இ - ள். தென்காசிமாநகரத்தில் எழுந்தருளியிருக்கப்பெற்ற கழுத்தில் நஞ்சுக்கறையையுடைய விசுவநாதசுவாமியுடைய ஒளிபொருந்திய மலரடிகளை மனத்து நினைத்துப் பிராமணரால் மதிக்கப்படுகின்ற கன்னியாகுமரியிலே தீர்த்தமாடி வீசுகின்ற இளந்தென்றலுண்டாதற்கு இடமாகிய பொதியமலையை அடைந்தார் எ - று. (௨௦)

வேறு.

ஏருலாவியபொதியமீதிலிருந்துநாள்பலசென்றபின்
வாருலாவியகோணவெற்பின்மகிழ்ந்துநன்மணிகண்டனார்
தாருலாவியநான்கினைத்தலையிட்டவெண்பதுசதுருகஞ்
சீருலாவியபூசைகொண்டதுதென்றன்மாமுனிதேர்ந்தனன்.

இ - ள். அழகுபரந்த பொதியமலையினிடத்தே போயிருந்து பலநாள் சென்றபின் காளகண்டராகிய சிவபெருமான் பூமியில் விளங்குகின்ற திரிகோணமலையின்கண்ணே மகிழ்ச்சியோடும் அமர்ந்து எண்பத்துநான்கு சதுருகமாக அடியார்செய்யும் பூசையை அங்கீகரித்ததைப் பொதியமலையிலுள்ள அகஸ்தியமுனிவர் அறிந்தார் எ - று.

திரிகோணமலையி லிருக்கின்ற சிவபெருமான் அடியார் செய்யும் வழிபாட்டை அங்கீகரித்து அவருக்குச் சாந்நித்தியராய் அனுக்கிரகஞ் செய்கின்றாரென்று அறிந்து தானும் ஆண்டுப்போய் வழிபாடுசெய்தற்குங் கருத்துக்கொண்டாரென்க. தாருலாவியதனை, என இயையும். இது 'குருகிக்கோட்டுக்குஞ்சரமாநாகம்'' என்பதுபோல நின்றது. தலையிட்ட என்பது முதலிட்ட என்னும் பொருளது. இவ்வாறுசிந்தாமணி நூலாரும் கூறுதல் காண்க. தென்றல் - ஆகுபெயர். (௨௧)

மீனமாய்வருதிகிரிநாயகன்மேனியிட்பழுதகலவே
தேனுலாவியபோதுகொண்டுதிகழ்ந்தபூசனைசெய்தவக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளருமலர்வேணிநாயகர்கழலிறைஞ்சவிரும்பியே
தானுமாழிகடந்துமுன்வளிதந்தயீழமடைந்தனன்.

இ - ள். மற்சாவதாரங்கொண்ட சக்கரதராகிய விஷ்ணுமூர்த்தி தம் மேனியிலுள்ள பழுதுநீங்கத் தேன்பொருந்திய பூக்களையிட்டுக் கிரமத்திஞல் விளங்கிய பூசையைச்செய்த அந்தவாசனை நீங்காத கொன்றைமலரைத்தரித்த சடையையுடைய கோணநாயகர் திருவடிகளைவணங்கி அருள்பெற விரும்பித் தாமுஞ்சமுத்திரங் கடந்து வெவ்விய காற்றினுற் தரப்பெற்ற இலங்கையை அடைந்தார் எ - று. (உஉ)

அடையுமாமுனிமேருமால்வரையதனினன்கொருமுடியதாய்க்
கடவுள்வாழ்திரிகோணயங்கிரிகண்டுசிந்தைமிகக்களித்
திடைவிடாதிருபோதுநல்லடையிட்டுநாண்மலரிட்டுவண்
தொடைகுலாவியவாலசந்திரர்சூடினாடிசூடினன்.

இ - ள். ஈழதேசத்தை அடைந்த அகஸ்தியமகாமுனிவர் பொன்மலையின் ஒருகொடுமுடியாய்ச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கப்பெற்ற திரிகோணமலையைக் கண்டு மனம்மிகக் களித்து இடைவிடாமல் இருகாலமும் வில்வத்தழைகளையிட்டும் அன்றலர்ந்த பூக்களையிட்டும் சிறந்த மாலையாகப் பொருந்தும்படி வாலசந்திரனைத் தரித்தவராகிய கடவுளுடைய அடிகளை வணங்கினர் எ - று. (உ௩)

இந்தவண்ணமநந்தகாலமியன்றநன்மறையாகமம்
புந்திசெய்துமடந்தைபங்குளபுனிதர்பூசனைபண்ணியே
யுந்துவெவ்வுலைமெழுகுபோன்மனமுருகியன்பளவின்றியே
வந்துதென்றல்குலாவுசந்தனமலயமாமுனிவைகுநாள்.

இ - ள். தென்றற்காற்றால் வந்து பரிமளிக்கும் சந்தனமரங்களையுடைய பொதியமலையிலே இருக்கும் அகஸ்தியமுனிவர் இந்தப்பிரகாரம் எண்ணில்லாத காலமாக விதி விலக்குகள் நன்கமைந்த வேதசிவாகமங்களை மனத்திற்கொண்டு மாதுமையாளைப் பாகத்துடைய கோணேசுரரைப் பூசைசெய்து கொல்லுலையிலிடப்பட்ட மெழுகுபோல மனம் நெக்குநெக்குருகி அன்பினளவுகடந்து இருக்குங்காலத்தில் எ - று. (உ௪)

வேறு.

வண்ணமார்சுழியுந்தியால்வண்டுவர்வாயா
னண்ணரும்பெருங்குணத்தினனித்திலநகையாற்
கண்ணகன்றுளசீரினுற்சொற்கயெய்க்கணத்தா
லுண்ணிகழ்ந்தபெருதவியான்மாதரையொத்தும்.

இ - ள். அழகு பொருந்திய சுழியையுடைய கடலிற் செல்லுதலாலும் [உந்திச்சுழியினாலும்] சிறந்த சிவப்புநிலத்தினுற் பொருந்திய அரிய பெருந்திறத்தாலும் [பவளம்போலும் வாயாலும் நணுகுதற்கரிய நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் குணங்களினாலும்] முத்தின்பிரகாசத்தினாலும் [முத்துப்போன்ற பற்களினாலும்] இடங்களிலே பரந்துள்ள சிறப்பினாலும் கண்ணுனது அகன்றிருக்கின்ற சிறப்பினாலும்] தேவலோக வருக்கத்தின



றவின்ற நீரைப்பொருந்திய தன்மையால் இம்மாவலிகங்கை தேவகங்கையை ஒக்கும் எ - று.

கைவிளக்கு - சிறுவிளக்கு. (உ௫)

இன்னபான்மையினன்மாவலிகங்கையெறிதிரைப்பூந்துறைத்தீர்த்தஞ்
சொன்னநான்மறைதேர்வேதியர்தம்மாற்றூயசங்கற்பமேதொடங்கிப்
பொன்னுநன்மலருமுத்துமக்கதையும்புகட்டியங்கைகுவித்தாடிற்
பண்ணியகங்கைமுதலெழுதீர்த்தம்படிந்தவப்புண்ணியம்பயக்கும்.

இ - ள். இத்தன்மையான சிறப்பையுடைமையினல் இம்மாவலிகங்கையாகிய எறிகின்ற திரையையுடைய ஆற்றுத்தீர்த்தமானது சொல்லப்பட்ட நான்குவேதங்களையும் அத்தியயனஞ் செய்து உணர்ந்த பிராமணர்களைக்கொண்டு சுத்தசங்கற்பஞ் செய்வித்துப் பொன்னையும், நல்லபூக்களையும் முத்துகளையும், அக்கதையையும் புகும்படி யிட்டு அஞ்சலிசெய்து ஸ்நானஞ்செய்தால், விசேடமாகச் சொல்லப்பட்ட கங்கைமுதலாயுள்ள எழுதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்தவினுற் பெறும்புண்ணியத்தைக் கொடுக்கும் எ - று.

கங்கைமுதலென்றது கங்கை, யமுனை, கோதாவரி முதலியவைகளை.

வானிலம்பரவுமறையவராடினன்முகனுடன்கடைக்கூட்டும்
மாநிலம்புரக்குமறைபவராடின்மறுமையுமத்தொழில்வழங்கும்
தேனலங்கிளர்தார்வணிகர்களாடிற்றிகழளகேசனிற்சிறக்கும்
பூநறுந்தொடையற்சூத்திராடிற்புகழ்தருமுதறகுலம்பொருத்தும்.

இ - ள். பூமியிலுள்ளாராலே தொழப்படுகின்ற பிராமணர் ஸ்நானஞ்செய்வாராயின், அவரைப் பிரமலோகத்தில் இறுதியிற்சேர்க்கும். பூமியைக்காக்கும் இராசாக்கள் ஸ்நானஞ்செய்வாராயின், மறுமையிலும் அதனைக்கொடுக்கும். வணிகர்களாடுவாராயின், அவர்களைக் குபேரனினும் மிக்கசெல்வர்களாகச் சிறப்பிக்கும். பூவாலாகிய நறிய மாலையை அணிந்த வேளாளர் ஸ்நானஞ்செயவாராயின், அவரை எவராலும் புகழப்படுகின்ற பிரமகுலத்திற் பொருத்தும் எ - று.

அரசரும் வேதத்திற்கு உரியவராதலின், மறையவரென்றார். மாநிலம் புரக்கும் என்பது அந்நியயோக வியவச்சேதம். (உ௬)

மங்கையபாடிற்பவமெலாமொழித்துமறுமையிலாடவரக்கும்
அங்கதோடிபேடராடுகின்மறுமைக்கனங்கனிற்பொழகளிக்கும்
பொங்கியசாதிமற்றுளோர்யாரும்பொருந்தியநீசருமாடிற்
றங்கெபவுலகிற்பெருங்குலநலனுந்தகுதியுமறுமையிற்றருமால்.

இ - ள். பெண்கள் தீர்த்தமாடுவாராயின், அவர்கள் பாவங்களெல்லாவற்றையும் நீக்கி அவர்களை மற்றப்பிறவியில் ஆடவர்களாக்கும்; அங்குள்ள பேடர் ஆடுவாராயின், மறுமைக்கண் மன்மதனினுஞ் சிறந்த பேரழகை அவர்களுக்குக் கொடுக்கும்; மிக்கமற்றைய சாதியார் சமஸ்தரும் நீசரும் ஸ்நானஞ்செய்வாராயின், தங்கப்பெற்ற இவ்வுலகத்திலே உயர்குலத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4763



யும், உயர்நலத்தையும், உயர்ந்தசிறப்பையும், மறுபிறப்பில் அவர்கட்குக் கொடுக்கும் எ - று.

பொங்கியசாதி மற்றுளோரென்றது இந்நான்கு குலத்துள்ளும் உயர்வுமிழிவுமாக மாறிக் கூடிப்பிறந்த அநுலோமர்முதலியோரை. நீசரென்றது - நான்குவருணத்துக்குங் கீழ்ப்பட்ட சங்கரசாதியாரை. (௬௧)

ஆடகத்தலத்துவானவராடினரும்பெரும்பதங்களையளிக்குந்
தேடியமுனிவரானவராடிற்செய்தவமொன்றுபத்தாக்கும்
பீடுறுமரக்கர்தானவராடிற்பெருஞ்சுரராகவேயாக்கும்
மாடியர்பசுக்கள்பறவைகளாடின்மறுமையின்மானுடராக்கும்.

இ - ள். தேவலோகத்திலுள்ள தேவர்கள் வந்து தீர்த்தமாடுவாராயின்: அவர்களுக்கு அத்தேவலோகத்திலும் மிக்கபதவிகளைக்கொடுக்கும். முனிவர்களானவர்கள் புண்ணியந் தேடும்பொருட்டு வந்துதீர்த்தமாடுவாராயின் அவர்செய்ததவம் ஒன்று பத்தாக விருத்தியாக்கும். பெருமைபொருந்திய இராக்கதரும் அசுரருந் தீர்த்தமாடுவாராயின், அவர்களைத் தத்தம் உலகத்தினின்று பெயர்த்து, தேவர் உலகத்திற்கொண்டுபோய்த் தேவர்களாக வைக்கும். பக்கத்திற் பொருந்திய பசுக்களும், பறவைகளும் முழுகுமாயின், அவைகளை மறுபிறப்பின் மனிதராக்கும் எ - று.

ஒன்றுபத்தாகு மென்பது சொற்பமாயினும் மிகப்பலவாக்கு மென்றபடி.

கிளர்தருமகரமதிதனிற்பூசங்கிட்டியிக்கங்கைநீராடி
னளவறுபிரமகத்திகண்முதலாயனந்தபாவங்களையகற்றுந்
தளர்வகலாடிவருமமாவாசைதன்னிலிக்கங்கையிற்படிந்தால்
உளவரும்பெருங்கோகத்திகளாதியோதியபாதகமொழிக்கும்.

இ - ள். பாதகரேனும் விளங்குகின்ற தைமாச பூச புண்ணியகாலத்திலே இம்மாவலிகங்கையாற்றிலே தீர்த்தமாடுவாராயின், அளவற்ற பிரமகத்திகள் முதலாயுள்ள அளவற்றபாதகங்களை அவர்களுக்கு நீக்கும். தளர்வை நீக்குகின்ற ஆடி மாசத்தில் வரும் அமாவாசை புண்ணியகாலத்தில் இம்மாவலிகங்கையாற்றில் ஸ்நானஞ்செய்வாராயின்; அவரிடத்தேயுள்ள நீங்குதற்கு அரிய பெரிய கோகத்திகள் முதலாய்ச் சொல்லப்பட்ட பாதகங்களை நீக்கும் எ - று-

பிரமகத்தி - பிராமணக்கொலை. முதலாயென்றதினாற் கள்ளுண்ணல் முதலிய மற்றைய மகாபாதகங்களையுங் கொள்க. கோகத்தி - பசுக்கொலை.

முந்தியவிஷுவக்களயனசங்கிரமமுயங்கியபுண்ணியகாலத்
திந்தநீர்படியிற்புண்ணியமதனையிவ்வளவெனவெளிதன்றாற்
சிந்தைசெய்யரவங்கதிர்மதியிரண்டிற்றீண்டியகாலத்துமூழ்கின்
வந்தனைவேள்விக்கனந்தமாகுதிகள்வழங்கியபுண்ணியம்வருமால்.

இ - ள். முதன்மைபொருந்திய விஷுவக்களும், உத்தராயண தக்ஷிணாயன சங்கிராந்தியுங், கூடிய புண்ணியகாலத்திலே இந்த மாவலிகங்கையிலே தீர்த்தமாடினால், ஆடுவோர்க்கு வரும் புண்ணியத்தை இவ்வளவென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொல்லுதல் இலகுவன்று. வருத்தத்தைச்செய்கின்ற இராகுகேதுக்கள் சந்திரசூரியரைத் தீண்டுகின்ற கிரகண புண்ணியகாலத்திலே யாரேனும் முழுகின், அவர்க்கு வழிபாடுபொருந்திய வேள்விக்கு அளவற்ற ஆகுதிகள் செய்தலினாலாகிய புண்ணியங் கைகூடும் எ - று. (௬௪)

தோன்றியமதியங்குறைதருமூவாவிற்றுலங்கியபூரணைதன்னி
லான்றதீம்புனலார்மாவலிகங்கையாடிடிற்செய்பவபகலும்
வான்றநூமாதசங்கிரமகாலம்வருந்தொறுமப்புனன்மருவி
லேன்றமெய்ப்பரிசமாதியாயுள்ளவிரும்பெரும்பவமெலாந்தீரும்.

இ - ள். தோற்றப்பட்ட சந்திரன் குறைந்து போகின்ற அமாவாசையிலும், விளங்குகின்ற பௌர்ணிமையிலும் நிறைந்த இனிய நீர்பொருந்திய மாவலிகங்கையாற்றிலே தீர்த்தமாடினால், அவர்செய்த பாவமெல்லாம் அகலும். பெருமைபொருந்திய மாசசங்கிராந்தி புண்ணியகாலம் வருந்தோறும் அம்மாவலிகங்கைநீரில் ஸ்நானஞ்செய்தால், தீண்டத்தகாதவைகளைத் தீண்டுதல் முதலாயுள்ள பெரும்பாவங்களெல்லாந் தீரும் எ - று. (௬௫)

மண்ணினிற்சிறந்தமாவலிகங்கைவளப்புனனிரந்தரமாடிற்
கண்ணினிற்காணிலுலகிலன்றன்றுசெய்பாதகங்கழியும்
நண்ணுதற்கரிதாமிப்பழந்தீர்த்தநாவினுனவிற்றினுநன்றும்
எண்ணினிற்கருதல்கண்டவர்தமைக்கண்டிடல்புகழ்கேட்டிடலினிதே.

இ - ள். பூமியிலுள்ள தீர்த்தங்களுட் சிறந்த மாவலிகங்கை மாநதிப்புனலில் இடையறாது தீர்த்தஸ்நானஞ்செய்யினும், கண்ணினாலே தெரிசிக்கினும், உலகத்திலே அன்றன்று செய்யப்பட்ட பாதகங்களெல்லாம் நீங்கும்; அடைதற்கரிதாகிய இந்தப்புராதனதீர்த்தவிசேடத்தை நாவினாலெடுத்துப் பேசினாலும் நல்லது. மனத்திலே நினைத்தலும் நல்லது. கண்டவர்களைக் கண்டாரைக்காணலும் நன்று. இதன்புகழ்பேசக் கேட்டிடுதலும் நல்லது எ - று. (௬௬)

அத்தகையதனுனிரந்தரமிந்நீராடுதல்காரணமாக
இத்தலமீதுமைமைநீதாபித்திடுதியென்றின்னருள்புரிய
நித்திலவலைநீர்குடங்கையிலடக்கிநெடுந்தமிழ்ப்பொதியமீதிருந்த
சுத்தமாமுனிவன்கேட்டுளமகிழ்ந்துசொன்னவிக்கங்கையிற்சுபர்த்து.

இ - ள். மேற்சொல்லப்பட்ட மேன்மைகளையுடைமையினால் எப்பொழுதும் இந்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தல் காரணமாக இத்தலத்திலே எம்மை நீர் பிரதிட்டை செய்யும் என்று இனிய அனுக்கிரகஞ்செய்ய முத்துகளையுந் திரைகளையுமுடைய சமுத்திரத்து நீரை உழுந்துப் பிரமாணமாக உள்ளங்கையிலடக்கிப் பெருந்தமிழ்க்கு இடமாகிய பொதியமலையின்கண் வீற்றிருக்கின்ற பரிசுத்தமுடைய முனிசிரேட்டர் கேட்டு மனமகிழ்ந்து சிவனாற் புகழப்பட்ட இக்கங்கையில் அன்புகூர்ந்து எ - று. (௬௭)

ஆரணமுதலேயந்தமேநடுவேயபத்தனேசுத்தவான்பொருளே
காரணன்முதலோரின்னமுங்காணுக்கனேநாயகமணியே
வாரணிமுலையாண்மலைமகளகலாவாமனேசோமசேகரனே
சேரணிகடல்சூழ்தென்றிசைக்கோணச்சிகரிவாழ்தேவனேசரணம்.

இ - ள். வேதமுதல்வரே! ஆதியாயுள்ளவரே! அந்தமாயுள்ளவரே! நடுவாயுள்ளவரே! எப்பொருட்கும் மூப்பாயுள்ளவரே! அநாதிமலமுத்த பிரவஸ்துவே! அரிபிரமேந்திராதி தேவர்கள் இன்னமும் இத்தன்மையரென்று உணராத சங்காரகர்த்தாவே! நாயகரத்தினமே! கச்சையணிந்த ஸ்தனங்களையுடைய மாதுமையாள் பிரியாத வாமபாகனே! சந்திரசேகரரே! தெற்குத்திக்கிலுள்ள அழகிய கடலாற் சூழப்பட்ட திரிகோணமலையில் வீற்றிருக்குந் தேவரே! எம்மைக்காக்க எ - று. (௪௮)

மத்தமுமெருக்குமிதழியுமறுகும்வன்னியுஞ்செக்கர்வெண்பிறையுஞ்
சுத்தவான்பயந்தபகீரதிப்புனலுஞ்சூடியசுருதியின்சுவையே
கத்துறுகடலின்கண்ணடையாலமுகவின்மணிக்கண்டனேயன்பர்
சித்தவாலயனேதென்றிசைக்கோணச்சிகரிவாழ்தேவனேசரணம்

இ - ள். ஊமத்தைமலரையும், வெள்ளெருக்கமலரையும், கொன்றைமலரையும், அறுகையும், வன்னியையும், செக்கர்மேகத்தில் விளங்குகின்ற வெண்மையான இளஞ்சந்திரனையும், தன்னிடத்தில் மூழ்கினருக்குப் பரிசுத்தபதவியைக் கொடுத்தேவிடுகின்ற கங்காநதியையுஞ் சூடியருளிய வேதாந்தரசமே! ஒலிக்கின்ற திருப்பாற் சமுத்திரத்திலே தோன்றிய நஞ்சுவிளங்கப்பெற்ற காளகண்டரே! அடியாருடைய இருதயகமலத்திலே கோயில்கொண்டருள்பவரே! தென்கோணசலத்தில் வாழும் மாதேவனே! எம்மைக்காக்க. எ - று. (௪௯)

பாரகமெடுத்தபைத்தலைத்துத்திப்பஃறலைபரவகங்கணனே
போர்வலிப்புரங்கள்பொடிபடக்குனித்தபெருவரைப்பிநாகபாணியனே
மாரனைவென்றபாலலோசனனேவலக்கைமான்மழுவுடையோனே
சீரகன்கடல்சூழ்தென்றிசைக்கோணச்சிகரிவாழ்தேவனேசரணம்.

இ - ள். பூமியைத்தாங்கிய படத்தினிடத்தே புள்ளியைக்கொண்ட பலதலைகளையுடைய ஆதிசேடனாகிய கங்கணமுடையவரே! பெரிய வலிபொருந்திய மும்மதில்களும் எரிந்து பொடிபடும்படி வளைத்த மலைவில்லைத் தரித்த திருக்கரங்களையுடையவரே! மன்மதனை எரித்த நெற்றிக்கண்ணரே! வலக்கையில் மானையும் மழுவையும் உடையவரே! சிறந்த விசாலமான கடலாற்சூழப்பட்ட தென்றிசைக்கோணமலையில் வாழுந் தேவாதிதேவனே! எம்மைக்காத்தருளுக எ - று. (௫௦)

பக்தனேபரனேஞானதேசிகனேநான்முகற்கிறைவனேவேள்வித்
தக்கனைவென்றவொருதனிச்சுடரேதலைவனேயென்னுயிர்க்குயிரே
மிக்கபேருலகுக்கொருவனேயாவித்துணைவனேசிவமணப்போதே
திக்கிசைகடல்சூழ்தென்றிசைக்கோணச்சிகரிவாழ்தேவனேசரணம்.



லும் [மூலைபொருந்திய சரீரத்திரட்சியினாலும்] உள்ளோங்கிய பெரியதவியாலும் பெண்களையொத்தும் எ - று.

இது தொடங்கி "நாளமைந்த" என்னும் முப்பத்தோராஞ்செய்யுள்வரையும் மாவலிகங்கைவருணனை. இக்கவி ஆற்றுக்கும் பெண்களுக்குஞ் சிலேடை

பழித்தெழுந்தெதிரேனுறுங்கோட்டொடுபோய்ந்து
குழித்துநீணிலப்புறந்தொறுமதசலங்குழுறிச்
சுழித்துமெய்ந்நிழற்றருக்குலமவேரறச்சுகிர்த்துக்
கழித்துக்காலுறக்கலக்குறுக்கைம்மலைகடுத்தும்.

இ - ள். முல்லைநிலந்தோறும் துதிக்கப்பட்டெழுந்து எதிர்க்கின்ற கரையோடுபாய்ந்து குட்டமாக்கி [நிந்தித்தெழுந்து எதிர்க்கின்ற மலையோடுபாய்ந்து நீண்ட பூமிதேவியின் முதுகுதோறுங் கோட்டுமண்கொண்டு] வெறியமைந்த நீர் ஒலிக்கப்பெற்றும் [மதசலமானது ஊரப்பெற்றும்] சுழிகொள்ளப்பெற்றும் மெய்ம்மையாகிய நிழலையுடைய மரக்கூட்டங்களை வேரறும்படி கிழித்தும் [தன்சரீரத்தின் சாயையைப் பகையானையென்று கருதி அதன்மேற் போய்க்கெழுந்தும், மரக்கூட்டங்கள் வேரறும்படி வகிர்ந்து நீக்கியும்] மிகவும் வாய்க்கால்களிற் பொருந்தக் கலக்கியும் [அடிபொருந்தக்கலக்கியும்] யானையை யொத்தும். எ - று.

புறம் - முல்லைநிலம். கோட்டுமண்கொள்ளல் - கொம்பினால் மண்ணைக் குத்தியெடுத்தல். இது ஒருசொல். சுகிர்த்தல்-கிழித்தல். இதனைப் "பல்லிறற் சுகிர்ந்தநாரின்" என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறின உரையாற் காண்க. [சிந். கேவிந். ௬௦] இக்கவி ஆற்றுக்கும் யானைக்குஞ் சிலேடை. (௨௬)

கலக்குந்தண்மணழிற்கமலமேறபயில்கின்றகருத்தாற்
றுலக்குமபாவனமபுடையருத்தார்ந்துநெந்தாழிலாற்
றலத்தவாலவளமபாவையும்படைத்திடுந்தகையாற்
புலக்குமுந்தியிற்பொருந்தலாற்பிரமனைப்போன்றும்.

இ - ள் கலக்குகின்ற குளிர்ந்த அழகிய நீரைத் தன்மேற் பொருந்துகின்ற கருத்தினாலும், [குளிர்மையையும் அழகையும் பொருந்திய தாமரைமலரின்மேல் வசிக்கின்றகருத்தினாலும்,] விளங்குகின்றமேன்மை பொருந்திய வெண்மையான அன்னங்கள்பக்கத்தில் நீங்காதிருக்குஞ் செயலினாலும், [அன்னவாகனத்தின் நீங்காத தன்மையாலும்,] பூமியிலுள்ள நல்வளங்களெல்லாவற்றையுங் கவர்ந்து பெற்றுக்கொள்ளும் தகுதியாலும் [பூமியிலுள்ள வஸ்துக்களெல்லாவற்றையுஞ் சிருட்டிக்குந் தன்மையாலும்] புலப்படுகின்ற சுழியோடு தோன்றுதலாலும் [விஷ்ணுவினுடைய உந்திச்செங்கமலத்திற் பிறத்தலாலும்] பிரமாவை யொத்தும். எ - று.

இது பிரமாவுக்கும் ஆற்றுக்குஞ் சிலேடை வகையாலமைந்த உவமை

இமைத்தவெண்ணிறப்பணிலமேற்பரிக்கின்றவியல்பால்
அமைத்திடுங்கவுத்துவமணிவெயில்விடுமழகாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைத்தபே ரொளிச்சக்கரந்தாங்கிய தகையாற்
கமைப்புறந்தொறுங்காத்தலால்விண்டுவைக்கடுத்தும்.

இ - ள். வெண்மையான நிறம்விளங்குகின்ற சங்கை மேற்கொண்டிருக்கின்ற தன்மையாலும், [சங்கைத் தரித்திருக்குந் தன்மையாலும்,] அமைக்கப்பட்ட பதுமராக இரத்தினங் கிரணத்தைவீசுஞ் சிறப்பினாலும்; [கௌஸ்துவமணி ஒளிவிடுஞ் சிறப்பினாலும்] உண்டாகிய பெரிய ஒளியையுடைய சக்கரவாகப் பறவையைத் தாங்குகின்ற தகுதியினாலும் [சக்கராயுதத்தைத் தாங்குகின்ற தகுதியினாலும்] பூமியினிடந்தோறும் நீரூட்டிக் காக்குஞ் செய்கையினாலும் [பொறுமையையுடைய முல்லைநிலந்தோறும் பசுக்களைக் காத்தலினாலும்] விஷ்ணுவை ஒத்தும் எ - று.

கௌத்துபம் - பதுமராகம். சுமை - பூமி. இது. விஷ்ணுவுக்கும் ஆற்றுக்குஞ் சிலேடை. (௨௮)

பரித்ததண்ணடைபுறம்பணைகுறிஞ்சிவன்பாலை
யிருந்துநான்கினுக்குள்ளனபொருளவையெல்லாந்
திரட்டிவெண்டிரைவாரியிற்கொணர்ந்திடுஞ்செயலா
லுரைத்தவைந்திணைக்குட்பகைதீர்ப்பவரொத்தும்.

இ - ள். பலவளங்களையுந் தாங்கிய மருதமும், முல்லையும், குறிஞ்சியும், பாலையுமாக வகுக்கப்பட்ட நான்குநிலங்களினும் உள்ளனவாகிய பொருள்கள் எல்லாவற்றையுந் திரட்டி வெண்மையான திரைபொருந்திய சமுத்திரத்திற் கொண்டுபோய் விடுஞ் செய்கையினாற், சொல்லப்பட்ட ஐந்திணைக்குள் மனவயிரந் தீர்க்கும் பகைவரைநிகர்த்தும் எ - று.

தண்ணடை - மருதம். புறம்பணை - முல்லை. வன்பால் - பாலை. பரலடுத்து உயர்ந்த நிலமாதல் பற்றி வன்பால் என்றார். ஓர் எதிரிக்குப் பகைவனிடத்தே நெடுங்கோபம் இருக்குமாயின் அவன் திரவியங்களெல்லாவற்றையும் கெடுக்க முயற்சி செய்தல் இயற்கை. (௨௯)

வரையுளாரமு மருவுவேழத்தினன்மருப்புந்
திரையுண்மன்னியபவளமுஞ்சங்குகித்திலமுந்
தரையுண்மன்னியசெம்பொனும்பலவிதனமும்
புரையுந்தன்மையால்வாணிகமாக்களைப்போன்றும்.

இ - ள். மலையிலுள்ள சந்தனமும், அங்கே பொருந்திய யானைக்கொம்பும், கடலிற்பொருந்திய பவளமும், சங்கின்முத்துகளும், பூமியிற்பொருந்திய பொன்னும், மற்றைய பலவித திரவியங்களும் கூறப்பட்டிருக்குந் தன்மையால் வாணிகர்களை நிகர்த்தும் எ - று. (௩௦)

நாளமைந்தபூங்கருங்குழற்பாகர்தாணண்ணி
மீளவந்துயர்சமனை யைவலங்கொண்டுமேவி
வானைசென்றுகண்மாவலிகங்கைகீர்வந்தா
காளகண்டர்தங்கிரியடிவிளக்குதல்கண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ - ள் அன்றலர்ந்த பூக்களை முடித்த கரியகூந்தலையுடைய தேவிபாகராகிய சிவபெருமானுடைய திருவடியிற் பொருந்தி மீளவந்து உயர்ந்த சமனையைவலங்கொண்டு வானைமின் சென்று பாய்கின்ற மாவலிகங்கைகாளது கோணேசருடைய மலையடியை விளக்குதலைப்பார்த்து எ - று.

தக்கிண கைலாசபுராணத்திலும் "வைத்தகங்கை யரன்பதமீதோங்கி" என்றதுங் காண்க. சமனை- சிவஞொளிபாதம் என்பர். (௩௧)

இத்தலத்திதுபுதுமையென்றகமகிழ்வெய்திச்
சுத்தவிப்புனலாடுதனன்றெனத்துணிந்து
தத்துவெண்டிரைக்கடவிடங்குழைந்திடக்கமழ்நீர்
பத்துமாவலிகங்கையின்கரையிடைச்சார்ந்தான்.

இ - ள். அந்த அகஸ்தியமுனிவரானவர் இந்தஸ்தலத்துக்கு இஃது ஓர் அற்புதமென்று மனமகிழ்ச்சியடைந்து பரிசுத்தமாகிய இந்நதியினிடத்தே தீர்த்தமாடுதல் நல்லதென்று நிச்சயித்து ஒலிக்கின்ற வெள்ளியதிரையையுடைய கடவிடங்குழையும்படி பரிமளம்பொருந்திய நீரோடும் பாய்கின்ற மாவலிகங்கை என்னும் ஆற்றங்கரையை அடைந்தார் எ - று. (௩௨)

தண்டுகுண்டிகைபலாசிலைபுத்தகஞ்சமிதை
கண்டவிங்கிவையனைத்தையுங்கரையின்மேல்வைத்துக்
கொண்டறங்கியதென்மலைக்கும்பசம்பவனார்
தண்டலம்புகழ்மாவலிகங்கையின்றீர்த்தம்.

இ - ள், மேகங்கள் வந்து படிகின்ற பொதியமலையிலிருக்கின்ற அகஸ்தியமுனிவர் தண்டு கமண்டல முதலியவைகளையெல்லாங் கரையில்வைத்துவிட்டுத் திண்ணிய பூமியிலுள்ளாராற் புகழப்படுகின்ற மாவலிகங்கை யாற்றின் தீர்த்தத்திலே எ - று.

கும்பசம்பவனார் - குடத்திற்பிறந்தவர். (௩௩)

வளைந்ததெண்டிரைவழிபடுகோணையைமனத்தே
புனைந்துமூழ்கிமெய்மனமகிழ்கின்றவப்போதிற்
றனங்கொளவார்குழற்காரிகையிடப்புறங்கலந்த
அனங்கருதனாசரீரிவாக்கியமாக.

இ- ள். பலவளங்களையுந் தரித்த சமுத்திரம்வழிபடுகின்ற திரிகோணாசலத்தை மனத்திற்றியானித்துத் தீர்த்தமாடி உடலும், மனமும் மகிழ்கின்ற சமயத்தில் மேகம்போன்ற நீண்ட கூந்தலையுடைய உமாதேவியாரை இடப்புறத்தே கலந்த சிவபெருமான் அசரீரிவாக்கியமாக எ- று.

அநங்கருதன் - சிவன். மன்மதனைக் கொன்றவரென்னும் பொருட்டு. கோணை -கோணாசலமென்பதின் மரூஉ. (௩௪)

வயங்கொடென்கலைவடகலைமுதற்கலைமுற்றும்
முயங்குசிந்தையின்முயறவப்பெருங்குறுமுனியே
வயங்கொண்மாவலிகங்கையின்பெருமையைநாமினி
வியம்பவாங்கவைநீயினிக்கேட்டியென்றிசைத்தான்.

இ - ள். வெற்றி பொருந்திய தென்கலை வடகலை முதலாயுள்ள கலைகளெல்லாவற்றையும் மனத்தால் முயன்று கற்றுணர்ந்த பெருந்தவத்தையுடைய அகஸ்தியமுனிவரே! மேன்மைபொருந்திய இந்த மாவலிகங்கையாற்றின் மகத்துவத்தை நாமிப்போது சொல்ல அவற்றை நீரிப்போது கேளுமென்று சொல்வாராயினர் எ - று.

ஆங்கு - அசை. கூ௬

வேறு.

நடந்தருசாரன்மணிவெயில்விளக்குஞ்சமனையங்கிரியினிலடிவைத்
திடந்தருகடல்சூழ் கோணையங்கிரியிலெழிற்றருமகன் றலைவைத்துக்
கிடந்திடுதகையாலுத்தரமுகமாய்க்கிளர்கடலடுத்திடுமியல்பாற்
படர்ந்திடுமுலகின்மாவலிகங்கைபழம்புனற்பகீரதிபோன்ற.

இ - ள். இந்த மாவலிகங்கையானது விசாலம்பொருந்திய பக்கத்திலுள்ள இரத்தினங்கள் கிரணத்தையுண்டாக்குகின்ற சிவனொளிபாதத்தில் அடிவைத்து (உற்பத்தியாகி) விசாலம்பொருந்திய கடலாற் சூழப்பட்ட கோணாசலத்திலே அழகிய பெரிய தலையைவைத்துக் கிடக்குந்தகுதியினாலும், வடக்குமுகமாய்ச் சென்று சமுத்திரத்தில் விழுந்தன்மையினாலும் விசாலமாகிய உலகத்திலே பழம்புனலாயுள்ள தேவகங்கையை ஒத்தது.

சூரியவமிசத்துள்ள பகீரதன் என்னும் இராசனாற்கொண்டுவரப்பட்ட தன்மையாற் பகீரதியென்றும், ஆதியிலுமாதேவியுடைய திருக்கரத்திற தோன்றிப் பிரமலோகத்திலிருந்துவந்த நீரானமையாற் பழம்புனலென்றுங் கூறினர்.

அடியுநம்மடியாய்முடியுநம்முடியாயங்ஙனங்கிடக்கையினாலும்
வடிவுநம்மயமாமரதனகிரணமருவியதீம்புனலாலுங்
கடிபுனையநந்தவளமாவிலிங்கங்கமழ்கின்றவளமையினாலும்
நெடிதுறுமுலகின்மாவலிகங்கைநீர்க்கொருநீரிணையுண்டோ.

இ - ள். அடியும் நம்மடியாயும் முடியும் நம்முடியாயும் அவ்வாறுகிடத்தலாலும் வடிவமும் நம்போல இரத்தினப்பிரகாசம் பொருந்திய இனிய நீருடைமையாலும் பரிமளம்பொருந்திய அளவற்ற வெண்மையான மாவிலிங்கங் கமழ்கின்ற சிறப்பினாலும் பெருமைபொருந்திய உலகத்திலே மாவலிகங்கையாற்றிற்கு ஒருதீர்த்தமும் சமமில்லை எ - று.

இதுவே எல்லாத்தீர்த்தங்களிலுஞ் சிறந்ததென்பது தாற்பரியம். (கூஎ)

ஆரணன்முதலோர்முனிவர்காணவடவியினிருளெலாமகற்றுங்
காரணமணிகள்கைவிளக்கெடுப்பக்கவின்றருசமனையங்கிரியைச்
சீரணிகாளமுகிலபிடேகஞ்செய்திடவேண்டியேசிந்தும்
வாரணிநகைபான்மாவலிகங்கைவானகக்கங்கையையானும்

இ - ள். பிரமாமுதலியோரும், முனிவருங் காணும்பொருட்டுக் காட்டிலுள்ள இருள்கள் எல்லாவற்றையும் ஓட்டுங்காரணமுடைய இரத்தினங்கள் கைவிளக்கெடுக்க அதனாற் சிறப்படைகின்ற சிவனொளிபாதமலையை அழகுபொருந்திய கருமுகில்கள் அபிடேகஞ் செய்ய விரும்பிச் சிந்



இ - ள். சங்காரகர்த்தாவே! தேவர்களுட்சிரேட்டரே! ஞானகுருவே பிரமநாயகரே! தக்கன் யாகத்தைச் சங்காரஞ்செய்த ஒப்பற்ற பரஞ்சோதியே! யாகமுதல்வரே! எவ்வுயிர்க்குமுயிராயுள்ளவரே! கூடியபெரிய உலகுக்கெல்லாம் முழுமுதற்கடவுளே! உயர்ந்தவரே! சிவமணம்பொருந்திய பூவே! திக்கிலுள்ளார் புகழுங் கடலாற் சூழப்பட்ட தென்றிசைக்கணுள்ள திரிகோணமலையிலெழுந்தருளியிருக்குந் தேவரே! எம்மைக் காக்க எ - று. (குக)

ஆதியேசரணமந்தமொன்றில்லாவற்புதக்கடவுளேசரணம்
பாதிசேர்மேனிப்பகவனேசரணம்பண்ணவர்க்கிறைவனேசரணம்
பூதிசேர்மேனிப்புனிதனேசரணம்பொற்சிலைத்தலைவனேசரணந்
தீதறுகடல்சூழ்தென்றிசைக்கோணைச்சிகரிவாழ்தேவனேசரணம்.

இ - ள். எப்பொருட்குமுதல்வரே! எம்மைக்காக்க. சற்றேனினும் முடிவில்லாத அற்புதக்கடவுளே! எம்மைக்காக்க. அர்த்தநாரீசுர வடிவத்தையுடைய பகவானே! எம்மைக்காக்க. தேவாதிதேவரே! எம்மைக்காக்க. விபூதியணிந்த திருமேனியுடைய சுத்தவஸ்துவே! எம்மைக்காக்க. பொன்மலையாகிய வில்லைத்தரித்த தலைவரே! எம்மைக்காக்க. குற்றமற்ற கடலாற் சூழப்பட்ட தென்றிருக்கோணமலையிலெழுந்தருளியிருக்குந் தேவனே! எம்மைக்காக்க. எ - று.

சரணம் - காத்தல். தேவன் - பிரகாசத்தையுடையவர். (குஉ)

என்றுதோத்திரங்கள்பலப்பலமொழிவுற்றியற்பெருங்கலசமாமுனியுஞ்
சென்றுநல்லிலிங்கதாபனஞ்செயற்குத்தகுமிடமேதெனச்செப்பக்
குன்றினைக்குனித்தகொழுமணிச்சுடருங்குளிர்புனற்கங்கையின்குண
லொன்றியகரைசைப்பதியுளததுவேயுத்தமமெக்கெனவுரைப்ப. [பா

இ - ள். என்று இப்படியே பற்பல தோத்திரங்களைக் கும்பசம்பவருஞ் சொல்லித்துதித்துப், போய் நல்ல சிவலிங்கப்பிரதிட்டை செய்தற்கு யோக்கியமான ஸ்தானம் யாதென்று வினவ மகாமேருமலையை வில்லாகவளைத்த கொழுவிய இரத்தினச்சுடர்போன்றவராகிய கோணேசுரரும் அகஸ்தியமுனிவரை நோக்கிக் குளிர்ந்த நீரையுடைய இந்தமாவலிகங்கையாற்றின் குணக்கரையிற் பலசிறப்பும் பொருந்திய கரைசைப்பதியென்று ஒன்றுண்டு. அதுவே எமக்கேற்ற உத்தமஸ்தானமென்று சொல்லியருள.

கங்கைச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம். கஂ௩.

## தாபனச்சருக்கம்.

மலிவயல்வாளைள்ளிளமேதியொருமுலைகன்றினுக்கூட்டக்
கலவியமுலைகள்பிறிதுளவிரங்கிக்குதிகொண்டுகுமுறியதீம்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பசாத்திரம் முற்றக் கற்றமைந்த அளவிலாத் தொழிற்குரிமையுடைய அறிஞரை வருவித்துப் புத்தியினாற் குறிக்கப்பட்ட நன்னாளிற் பொருந்திய ஒரு சுபமுகூர்த்தத்தில் எ - று. (௮)

அத்தலமேற்சிவனுறைதற்காகியவோரிடநோக்கி
வித்தகவெண்சங்கமைத்துமேதினியைச்சமமாக்கு
மித்தகைமையிமையோர்கண்டீதரிதோவெழுகடல்சூழ்
குத்தலத்தைச்சமமாக்குங்குறுமுனிவனுக்கென்றார்.

இ - ள். அத்திருக்கரைசைநகரத்திலே சிவப்பிரதிட்டை செய்தற்கேற்ற ஒருநிலயம் பார்த்து மேன்மை பொருந்திய சங்கஸ்தாபனஞ் செய்து பூமியை ஏற்றிழிவில்லாமற் சமனாக்கும் இத்தன்மையைத் தேவர்கள் பார்த்துச் சத்தசமுத்திரமுஞ் சூழ்ந்திருக்கும் பூமியை வடபால்தாழ்ந்தபொழுது தென்பால்சென்று சமனாக்கிய அகஸ்திய முனிவருக்கு இதனைச்சமமாக்கல் அரியதோவென்று பேசிக்கொண்டார்கள், எ - று. (௯)

திறுத்துமுறையினிற்பிரதமேட்டிகைசெய்நிலமதனி
லுறுத்துகருங்கல்லினத்திபாரஞ்செய்துறைவித்து
மறைப்பொருளாருறைகர்ப்பயனையொடிருமண்டபமு
மறிக்கைதருமுபானுதியருந்தூபியந்தமுமாய்.

இ - ள். தாபன முறைமையினால் முதலே செங்கற்பதித்த நிலத்திலே உறுத்தப்பெற்ற கருங்கல்லினால் அத்திபாரமிட்டு வேதப்பொருளாய் இருக்குங் கடவுள் உறைகின்ற கர்ப்பக்கிருகமண்டபத்தோடு மற்றைய இருமண்டபங்களையும் அறியப்படுகின்ற உபானம் முதலாக அரிய தூபி பரியந்தம்வரையும் எ - று.

இருமண்டபமென்றது அருத்தமண்டபமகாமண்டபங்களை. (௧௦)

உள்ளபடியத்தனையுமுயர்செங்கல்லாலமைத்து
விள்ளருமாமதில்வகுத்துவிளங்கியநன் முகூர்த்தத்தே
எள்ளருஞ்சீர்விண்டிறைஞ்சவிமையவர்பூமழைபொழியத்
தள்ளரும்வைதிகசைவந்தாரணியெல்லாந்தழைப்ப.

இ - ள். சொல்லப்பட்டுள்ளபடி அவ்வளவையும் உயர்ந்த செங்கல்லினாற்செய்து விள்ளுதற்கரிய பெரிய மதில்களையும், நாற்பக்கத்தும் வகுத்துச் சுபமுற விளங்கிய நல்லமுகூர்த்தத்திலே இகழ்தற்கரிய கீர்த்தியையுடைய நாராயணமூர்த்தி வணங்கத் தேவர்கள் பூமாரிசொரியத் தள்ளுதற்கரிய வைதிகசைவ சன்மார்க்கம் பூமியெங்கும் விருத்தியாக எ - று.

வைதிகம் - வேதசம்பந்தம். சைவம் - ஆகமசம்பந்தம். (௧௧)

அருங்கமலன்பதமுடிப்பவாரணவன்பதமுடிப்ப
உரங்கசிவமணமணப்பவுலகுசிவமணமணப்பப்
பெருங்கடனஞ்சருந்தவனைப்பேரனஞ்செய்தருந்தவனை
வருஞ்சிகரவில்லானைமகிழ்ச்சிகரவில்லானை.



இ- ள். உயர்ந்த தாமரைப்பூவிலிருக்கும் பிரமதேவர் பாதங்களைச் சென்னிற்சூடிவணங்கவும், வேதங்களின் வலிய பதங்களைச் சொல்லிமுடிப்பவும், மனங் கசிவானவாய் மகிழ்ச்சியைக்கூடவும் உலகத்திலே சிவமணம் பரிமளிக்கவும் பெரிய திருப்பாற்கடலின் நஞ்சைப்பெரிய உணவாகச்செய்து உண்டவரும், அரியதவநிலையை யுணர்த்தினவரும், மகாமேருமலையை வில்லாக உடையவரும், மகிழ்ச்சியுங் கரவுமில்லாதவருமாகிய சிவனை எ - று.

அஞ்செழுத்துநாக்குறையவாயவரின்னுக்குறைய
விஞ்சுலகத்தடையிடர்க்குமேவண்டினர்கைபடையிடற்குக்
கஞ்சமுனிக்கொண்டாடக்கண்பனிநீர்கொண்டாட
வஞ்சயனமநுபவிப்பஞாலமெலாமநுபவிப்ப.

இ - ள் பஞ்சாக்கரம் உச்சாரணைத்தோடு நாக்கினிடத்தே தங்கப்பெறுகின்றவருடைய துன்பம் நீங்கவும், மிகுந்த உலகத்தின்கண்ணே பொருந்திய துன்பத்தை நீக்கவேண்டியவர்கள் அடைக்கலம் புகுதற்கு மலரடியையுன்னிக் கொண்டாடவும், கண்கள் ஆனந்தபாஷ்பங்கொண்டு முழுகவும், நெக்குருகிய மனத்தின் மந்திரத்தியானந் தோற்றவும் பூமியெல்லாம் அனுபவம் பெறவும் எ - று. (௧௨)

புறச்சமயமிகவல்கப்பொருந்துதவமிகவல்க
அறப்பொருளிற்சகமகலவாரிருள்வஞ்சகமகலத்
திறற்புரம்வில்வளைத்தெய்தசிவனன்பர்வளைத்தெய்த
நிறத்திருநீறிடஞ்சிறக்கநெருங்கினர்தம்மிடஞ்சிறக்க.

இ - ள் பரசமயம் மிகவுங் குறையவும், பொருந்திய தவமானது இவ்வுலகத்தில் நிறையவும், பூமியானது தரும மார்க்கத்தினால் விரிவடையவும், அரிய பாசமும் வஞ்சகமும் நீங்கவும், வலிய வில்லை வளைத்து முப்புரங்களையுமழித்த சிவபெருமானுடைய தொண்டர்கள் சூழ்ந்து அடையவும், வெண்ணிறம்பொருந்திய விபூதியையிட்டுப் பஞ்சாக்கர உபதேசமிகும்படி நெருங்கிய தொண்டருடைய இடங்கள் சிறப்படையவும் எ - று. (௧௩)

வானவர்துந்துபிமுழங்கமன்னிபஞ்சம்பணைமுழங்கத்
தேனிகர்நான்மறைமுழங்கத்திமிர்முகதகுழாமுழங்க
வானசிவசிந்தனையாரரகரவாசகமுழங்க
ஞானநிலைக்குலமுனிவர்நாவிடையாசாமுழங்க.

இ - ள். தேவதுந்துபிமுழங்கவும், நிலைபெற்ற பஞ்சக்கருவி முழங்கவும், தேன்போலும் இனிய சதுர்வேதம் முழங்கவும், ஒலியையுடைய மேசமூகமுழங்கவும் அவ்விதமான சிவத்தியான முடையோர் ஹர ஹர என்னும் வாசகங்களை ஒலிக்கவும், ஞானநிலையையுடைய உயர்ந்த முனிவர்கள் நாக்கினிடத்தே ஆசாம் ஒலிக்கவும் எ - று. (௧௪)

மாகங்களெலாஞ்சிவபோகபரபோகமகிழ்ச்சிபெற
நாக்களெலாமஞ்செழுத்தைநெஞ்சமூத்திநலஞ்சிறக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குசிவனருளுமகுடாகமத்தின்கிரியையினாற்
றேக்குகடலடைகுடங்கைத்தென்முனிதாபனஞ்செய்தான்.

இ - ள். ஆன்மாக்களெல்லாஞ் சிவபோகங்களினாலும் பிறபோகங்களினாலும் மகிழ்ச்சியடைடவும, நாக்குகளெல்லாம் பஞ்சாக்கரத்தை மனநிலமூத்தி உச்சரித்துச் சிறப்படையவும், உண்டாக்குகின்ற சிவனருளினாலே மகுடாகமத்திற்சொல்லப்பட்ட கிரியைகளினாலே தேக்கப்பெற்ற கடலையடக்கிய உள்ளங்கையையுடைய அகஸ்தியமுனிவர், பிரதிட்டை செய்தார் எ - று. (௧௬)

திவ்வியயாமணிச்சருவதீர்த்தமுடையவரென்றே
அவ்விறைக்குத்திருநாமமருளிச்செய்தத்தலத்தும்
றவ்விலபேருட்போகசத்தியையுந்தாபித்துக்
கவ்வைபறுநவதீர்த்தக்கணபதியுந்தாபித்தான்

இ - ள். சிரேட்டமான பெரிய இரத்தினங்களையுடைய சர்வதீர்த்தமுடையவரென்று இந்தக்கடவுளுக்குத் திருநாமமிட்டு அத்தலத்திலே குறைவற்ற பெரிய அருளையுடைய போகசத்தியாகிய உமையையும் பிரதிட்டைசெய்து, துன்பமற்ற நவதீர்த்தவிநாயகரையும் பிரதிட்டை செய்தார் எ - று. (௧௭)

தாபனச்சருக்கம்முற்றிற்று.

ஆக விருத்தம் - ௧௨௯.

## பூசைச்சருக்கம்.

கயல்குதிக்கப்பொதியவிழ்க்குங்கமலமலர்ச்செழுந்தேறல்
வயல்குதிக்கநீர்குதிக்கும்வான்கரைசைத்தேவர்பிரான்
புயல்குதிக்குந்திருக்கோவிற்புகுமவர்தாட்டுகளன்றே
மயல்குதிக்குமேழ்பிறவியழுக்கறுக்குமருந்தாமால்.

இ - ள். கயல்மீன்கள் குதிக்கக், கட்டவிழ்கின்ற தாமரைப்பூவிலுள்ள செழுமையாகிய தேன்கள் வயலினிடத்தே குதிக்க நீர்பெருகுகின்ற திருக்கரைசைமாநகரின்கண்ணே எழுந்தருளியிராநின்ற தேவாதிதேவராகிய சிவபெருமானுடைய முகிலும்படியும் உயர்ச்சியையுடைய திருக்கோயிலினுள்ளே தெரிசனஞ்செய்யப் புகுந்ததிருத்தொண்டர்களுடைய பாததூளியன்றோ மயல் தங்கப்பெற்ற எழுபிறப்பென்னும் நோயை அறக்கும் மருந்து.

குளிர்புனன்மாவலிகங்கைக்குணபாலிற்குறியமைந்த
வளவயல்சூழ்கரைசையினன்மறைப்பொருளைத்தாபித்துத்
தளையவிழ்தார்க்குறுமுனிவன்றனதுதவக்குறையகல்வான்
அவிறந்தவார்வத்தாலவ்விறையைக்கைகுவித்தான்.

இ - ள். கட்டவிழப்பெற்ற மாலையையணிந்த அகத்தியமுனிவர் குளிர்ச்சியையுடைய மாவலிகங்கையாற்றின் கீழ்க்கரையிலே குறியமைப் பெற்ற வளம்பொருந்திய வயல்சூழ்ந்த திருக்கரைசைமாநகரத்திலே வேதப்பொருளாகிய பரமசிவமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து தம்முடைய தவக்குறை நீங்கும்பொருட்டு அளவற்ற ஆர்வத்தோடும் அக்கடவுளை வணங்கினார் எ - று. (௨)



அத்தனேகோவேயறிவேமறைப்பொருளே
சுத்தனேயேகச்சுடரேயருட்கடலே
நித்தனேசேவேறுநின்மலனேநாயடியேன்
சித்தனேதென்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - ள். எப்பொருட்கும் மூப்பானவரே! தலைவரே! ஆன்மாக்களின் அறிவாயுள்ளவரே! வேதப்பொருளே! அநாதிமலமுத்தரே! கைவல்லிய சோதியே! கிருபாசமுத்திரமே! என்றுமுள்ளவரே! இடபத்தின்மேலேறும் மலரகிதரே! நாயினியல்புடையேனது மனத்திலிருப்பவரே! திருக்கரைசைத்தேவனே! உமது திருவடிகள் துதிக்கப்படுவன எ - று. (௩)

நீலமேகோமேதகமணியேநித்திலமே
ஆலமேய்கண்டத்தமுதேயுயிர்க்குயிரே
மூலமேஞானச்சுடரேயறிவுடையோர்
சீலமேதென்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - ள். நீலரத்தினமே! கோமேதகரத்தினமே! மௌத்திகமே! நஞ்சமர்ந்த கழுத்துப்பொருந்திய அமுதம் போல்வாரே! ஆன்மாவுக்கு ஆன்மாவே! மூலப்பொருளே! ஞானசோதியே! அறிவுடையோருக்கு அறிவாயுள்ளவரே! திருக்கரைசைப்பெருமானே! உமதுதிருவடிகள் துதிக்கப்படுவன.

பாரேவளியேவெளியேபடுகனலே
நீரேகதிரேமதியேமேவச்சிரமே
காரேறுகண்டக்கனியேசிவக்கடலே
சீரேறுந்தென்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - ள். பிருதிவியே! காற்றே! ஆகாயமே! உண்டாகின்ற தேயுவே! அப்புவே! சூரியனே! சந்திரனே! வயிரரத்தினமே! கருமைதங்கிய கழுத்தையுடைய கனியே! நன்மைக்கடலே! கீர்த்தியேறப்பெற்ற திருக்கரைசைப்பெருமானே! உமது திருவடிகள் துதிக்கப்படுவன எ - று. (௫)

ஒன்றேபிரண்டேயொருமூன்றேயோரைந்தே
நன்றேபிறிதேநயனமேகண்மணியே
குன்றேயலைகடலேகொற்றமேபாமதனன்
வென்றேர்பயில்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - ள். ஏகவஸ்துவே! ஆத்தனாரீசுவரமூர்த்தியே! திரிமூர்த்தியாயுள்ளவரே! பஞ்சமூர்த்தமே! நன்மையுடையோரே! அல்லனவாயுள்ளவரே! கண்ணே! கண்மணியே! குணக்குன்றே! அருட்கடலே! சர்வவிசயமே! தென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந் காற்றுப்பயிலுங் திருக்கரைசைத்தேவனே! திருவடிகள் துதிக்கப்படுவன. (௬)

மதனன்றேர் - தென்றல்.

வானுய்நிலனுய்வளியாயெமதுயிராய்
நாளுவிதமாகிநாதாந்தமாய்ப்பிரமங்
கானுப்ச்சகளமுமாய்த்தாபரமாய்ப்பாரளிக்குந்
தேனுர்பொழிற்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - ள். ஆகாசமாயும், பூமியாயும், காற்றாயும், எமது ஆன்மாவாயும், இவ்வாறே பலவிதமாயும், நாதாந்தமாயும், பிரமமாயும், உருவமாயும், தாபரமாயும், பொருந்திநின்ற உலகத்தைக் காக்கின்ற தேன்பொருந்திய சோலைசூழ்ந்த திருக்கரைசையிலிருக்கின்ற தேவனே! உமது திருவடிகள் துதிக்கப்படுவன எ - று. (௭)

வாடும்பனுவன்மருங்குலாள்கண்டுவப்ப
ஆடும்பிரானேயபரார்பெருமானே
பாடுமிருவர்பயில்செவியானேயிருவர்
தேடும்புகழ்க்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - ள். வாடுகின்ற நூலொத்த இடையையுடைய உமாதேவியார் கண்டு விரும்ப நடனஞ்செய்கின்ற கடவுளே! தேவாதிதேவரே! பாடுகின்ற தும்புருநாரதரென்னும் இருவர் பாட்டும்பயின்ற திருச்செவியையுடையோரே! பிரமவிஷ்ணுக்கள் என்னுமிருவராலுந் தேடப்பட்ட கீர்த்தியையுடைய திருக்கரைசைப்பதியில் வீற்றிருக்குங் கடவுளே! திருவடிகள் துதிக்கப்படுவன எ - று. (௮)

பன்றியாய்மாயன்பணிதாளிணைதேட
அன்றுபிரமனனமாய்முடிதேட
நின்றநெடுஞ்சுடரேநீலமிடற்றோனே
தென்றலுலாந்தென்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - விஷ்ணுமூர்த்தி பன்றிவடிவங்கொண்டு வணங்கப்படுந் திருவடிகளிரண்டையுந் தேடவும், பிரமா அன்னவடிவங்கொண்டு முடியைத்தேடவும் அவ்விருவர்க்கும் நடுவே அந்நாளில் நின்றருளிய நெடிய அக்கினிரூபரே! களகண்டரே! தென்றற்காற்றுலாவுகின்ற திருக்கரைசைத் தேவனே! உமது திருவடிகள் துதிக்கப்படுவன எ - று. (௯)

காலாந்தகனேகடவுளேதத்துவத்தின்
மேலாம்பொருளேவிளக்கேவிளக்கொளியே
சாலாம்பதமேநகையாம்படையரனே
சேலாலுந்தென்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - ள். இயமனுக்கு முடிவைச் செய்த கடவுளே! தத்துவாதீதப்பொருளே! விளக்குப்போல்வாரே! விளக்கொளிபோல்வாரே! சாயுச்சியபதமே! சிரிப்பாகிய படையுடைய சங்காரகர்த்தாவே! சேல்மீன்கள் நிறைந்த தென்கரைசைப்பதியில் வாழ்கின்ற சோதியே! உமது திருவடிகள் துதிக்கப்படுவன எ - று. (௧௦)



தந்தையேதாயேதமரேயடிபோற்றி
எந்தையேகண்ணேயிறையேயடிபோற்றி
முந்தையேஞானமுதலேயடிபோற்றி
சிந்தையேதென்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - ள். ஆன்மாக்களுக்குப் பிதாப்போன்றவரே! மாதாப்போன்றவரே! சுற்றம்போன்றவரே! நுந்திருவடிகள் துதிக்கப்படுவன. எம்பெருமானே! எமது கண்போன்றவரே! எங்கும் வியாபகரே! நுமது திருவடிகள் துதிக்கப்படுவன. முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம்பொருளே! ஞானமுதல்வரே! நுமது திருவடிகள் துதிக்கப்படுவன. எமது மனத்திலுள்ளவரே! திருக்கரைசைப்பெருமானே! நுமது திருவடிகள் துதிக்கப்படுவன.

ஆதியேபோற்றியரனேயடிபோற்றி
சோதியேபோற்றிசுடரேயடிபோற்றி
பாதியேபோற்றிபரனேயடிபோற்றி
நீதகலுந்தென்கரைசைத்தேவேயடிபோற்றி.

இ - ள். எப்பொருட்கும் முதல்வரே! எம்மைக்காக்க. சங்காரகர்த்தாவே! உம்முடைய திருவடிகள் துதிக்கப்படுவன, சோதிரூபரே! எம்மைக்காக்க. தீபமே! உம்முடைய திருவடிகள் துதிக்கப்படுவன. அர்த்தநாரீசுவரரே! துதிக்கப்படக்கடவீர். சிரேட்டமுடையரே! உம்முடைய திருவடிகள் துதிக்கப்படுவன. குற்றம் நீங்கிய திருக்கரைசையில் வீற்றிருக்கின்ற கடவுளே! உமது திருவடிகள் துதிக்கப்படுவன எ - று. (௧௧)

என்றென்றுவாழ்த்தியபற்றென்குறுமுனிவன்
நன்றுமலரிட்டுத்தொன்பாவலிகங்கை
நன்றுகொளுஞ்செழுநீர்நன்மஞ்சனமாடி
அன்றுமுதலாவனந்தநாட்பூசித்தான்.

இ - ள். இப்படியே பலதோத்திரங்களைச் சொல்லித்துதித்து இலக்கணமமைந்த அழகிய அகஸ்தியமுனிவர் நெருங்கியபுட்பங்களையிட்டுப் பழைய மாவலிகங்கையிற் பொருந்திய நன்மையமைந்த செழிய நீரினுலேதிருமஞ்சனமாட்டி அன்றுதொடங்கி அளவில்லாத நாள்வரையும் பூசைசெய்தார்.

நீண்டபுவியினினைவின்படியனைத்தும்
வேண்டுந்தவமும்விழைவுமமைந்ததற்பின்
மூண்டசலதிக்குடங்கைக்குறுமுனிவன்
மீண்டுமிளநதென்றற்சிகரியிடைச்சென்றடைந்தான்.

இ - ள். நெடிய பூமியிலுள்ளார் எண்ணத்தின்படி சகலசம்பத்தும் வேண்டுந்தவமும் இட்டங்களும் ஆண்டே அமைந்தபின் கூடிய சமுத்திரத்தை அடக்கிய உள்ளங்கையையுடைய அகஸ்தியர் அவ்விடத்திநின்றுந் திரும்பித் தென்றற்காற்று வருமலையாகிய பொதியமலையிடத்தே புகுந்தார் எ - று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகையதாகவேகநாட்சென்றதற்பின்
சுத்தமிகுதண்டார்த்துழாய்மார்பன்மீனுருவாய்க்
கத்துகடலடையக்கண்டுதிருமார்பிருந்த
சித்தமகிழ்கமலச்செல்வியிவணெய்தி.

இ - ள். அவ்விதமாக அளவில்லாத காலஞ்சென்றபின் பரிசுத்தமிருந்த குளிர்ந்த துளசிமாலையை அணிந்த விஷ்ணுமூர்த்தி மச்சியரூபமாய் ஒலிக்குங் கடலிடத்தே போகக்கண்டு அவருடைய அழகிய மார்பின் மேலிருந்த மனமகிழ்ச்சியையுடைய இலக்குமி இக்கரைசைப்பதியில் வந்து எ - று.

கங்கைநீராடிக்கமழ்மாமலர்தூவி
அங்கையாற்கும்பிட்டகலாதருச்சித்துச்
சங்கைநெடுமாயன்றனித்துழாய்மார்பிருக்க
மங்கலமார்செல்வமவியும்வணம்படைத்தாள்.

இ - ள். மாவலிகங்கையாற்றிலே தீர்த்தமாடிப் பரிமளம் மிகுந்த பூக்களிட்டு அஞ்சலிசெய்து அவ்விடத்தை நீங்காது அருச்சனைசெய்து மேன்மைபொருந்திய விஷ்ணுமூர்த்தியினது ஒப்பற்ற துளசிமாலைபொருந்திய மார்பின்கண்ணே இருக்க மங்கலத்தன்மை பொருந்திய செல்வத்தை நிறையும்படி அவ்விலக்குமி பெற்றுக்கொண்டாள் எ - று. (கசு)

இவ்வண்ணம்பெற்றவிணர்ப்பேதைபோயகலக்
கவ்வையகலனந்தகாலங்கடந்ததற்பின்
பவ்வநெடுங்கலைதோய்பாரனைத்துந்தன்னாணை
வவ்வியசிர்ச்சிங்கபுயன்வந்தனனிங்கினியுரைப்பாம்.

இ - ள். இவ்விதமாகப் பெற்றுக்கொண்ட இலக்குமிதேவி அவ்விடத்தினின்றும் போய்விடத் துன்பநீங்க அளவற்ற காலஞ்சென்றபின் சமுத்திரமாகிய நெடிய வஸ்திரத்தையுடுத்த பூமண்டலமெங்குந்தன்னாணையைக்கொள்ளும்படி செய்த சிறப்பினையுடைய சிங்கபுயனென்னும் இராசா அங்கேவந்து செய்தவைகளை இங்கே இனிச்சொல்வாம் எ - று. (கஎ)

வேறு.

பண்டைமறைக்கும்பகர்வருதில்லைப்பதியெய்திக்
புண்டரிகத்தன்புகழ்சிவகங்கைப்புனன்மூழ்கி
அண்டர்வழுத்துஞ்சிவபெருமானாருளாடல்
கண்டுகளிக்குந்தொண்டர்கடாளென்கண்மீதால்.

இ - ள். புராதனவேதங்களுக்குஞ் சொல்லுதற்கரிய சிதம்பரத்தை அடைந்து வியாக்கிரபாதர் புகழ்கின்ற சிவகங்கைத்தீர்த்தத்திலே முழுகித் தேவர்கள் துதிக்கும் நடராசப்பெருமானுடைய பூரணானுக்கிரகத்தையுடைய திருநடனத்தைக்கண்டு களிக்கின்ற திருத்தொண்டர்களுடைய திருவடிகள் என்கண்மேற் கொள்ளத்தக்கன எ - று. (கஅ)

சிலமிகுத்தோர்வழிபடுகீழைத்திசைகணணித்
தாலமதிக்கும்பழையவொராழித்தகுதேர்கொண்



டாலுமறற்றெண்டிரைபுடைசூழ்நெட்டகன்ஞாலப்
பாலையளக்குங்கதிர்மரபாலுற்பவமானோன்.

இ - ள். நல்லொழுக்கம் மிக்கோரால் வழிபடப்படுகின்ற கிழக்குத்திசையையடைந்து பூமியிலுள்ளார் மதிக்கின்ற தகுந்த பழைய ஒற்றைச் சிற்றேரைக்கொண்டு ஒலிக்கின்ற மணலையுடைய சமுத்திரத்தாற் சூழப்பட்ட நெடிய பூமண்டலபாகங்களை அளக்கின்ற சூரியவமிசத்தில் அவதாரஞ்செய்தவன் எ - று. (ககூ)

ஓதமருநெட்டலையுலகெல்லாமுய்யார்செங்கோல்
பேதமுறுமற்றண்குடைநீழற்பிரிவின்றி
நீதிபெறக்கொண்டரசுபுரிந்தோனிகழ்சிங்க
பூதரனென்னும்பெயரையடைந்தபூபாலன்.

இ - ள். திரை நீங்காத நெடிய கடலாற்சூழப்பட்ட பூமண்டலமெங்கும் உயர்ந்த செங்கோலைப் பேதமடையாமற் குளிர்ந்த குடைநிழலிலே பிரிவின்றி நீதிபெறக்கொண்டு இராச்சியஞ் செய்தவனாகிய விளங்குகின்ற சிங்கபூதரனென்னும் பேரையடைந்த இராசன் எ - று. (உ0)

முன்னைவினைத்தன்னூழின்முயக்கான்முரண்மாறு
மன்னுபடைத்தார்பரிநிரைபொற்றேர்மதவேழந்
துன்னுகளப்போரிற்சயமற்றேசுகமேவுந்
தன்னதடற்பார்பிறர்கொளவிட்டுத்தமியாகி.

இ - ள். பூர்விக வினைவசத்ததான ஊழின்முயக்கால் வலிமை நீங்காது முற்செல்லுங் கொடிப்படையும், குதிரைவரிசையும், அழகிய தேரும், மதயானையும் நெருங்கிய போர்க்களத்திலே பராசயப்பட்டுச் சுகம்பொருந்திய வலிய தனதுபூமியைப் பிறர் அபகரிக்க விட்டுத் தனித்து எ - று. (உக)

தாமமுடித்தார்மனுகுலவேந்துஞ்சலகாமி
யாமடல்வென்றிப்பரிமிசைகொண்டேயலைமாறுப்
பூமலிமுந்நீர்ப்புணரிகடந்தேபொழின்மேவுந்
தேமருவண்பூக்கமழுமிலங்கைத்தீவெய்தி.

இ - ள். ஒளிபொருந்திய முடியின்மாலையையுடைய மனுகுலராசனுஞ் சலகாமியாகிய வலிமையையும், வெற்றியையுமுடைய குதிரையின்மேலேறிக்கொண்டு அலை நீங்காத பொலிவுபொருந்திய மூன்று நீர்மையையுடைய சமுத்திரத்தைக்கடந்து சோலையிலுள்ள தேன்பொருந்திய சிறந்த பூக்கள் பரிமளிக்கின்ற இலங்கைத்தீவையடைந்து எ - று.

சலகாமி சலத்திற் செல்வது. முந்நீர் - படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் மூன்று தொழில். (உஉ)

படருமலங்கல்பயிறருவென்றிப்பரிகின்று
கடிதிசிறங்கிப்பரியையுமாழிக்கரைகட்டித்
தொடருமரந்தைப்பசியுளிளைக்குந்துயர்மேன்மே
லடரமெலிந்தக்கரையினிருக்குமக்காலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ - ள். செல்லுகின்ற ஒளிபொருந்திய வெற்றியையுடைய குதிரையினின்றும் விரைவிலிறங்கிக் குதிரையையுஞ் சமுத்திரக்கரையிற் கட்டித்தொடர்ந்த துன்பமாகிய பசியுள் இளைத்தற் கண் உண்டாகின்ற தூக்கம் மேலும்மேலும் வருத்த மெலிந்து அக்கரையிலிருக்கும் அப்பொழுது எ - று.

திண்டருசாரற்றிகழுமிலங்கைத்தீவெல்லாம்
மண்டியகாவல்புரிதருதிண்டோண்மாபூதந்
தண்டிரைவேலைக்கரையினிருக்குந்தார்வேந்தைக்
கண்டுவணங்கித்தன்னிருகண்ணுங்களிகூர்ந்து.

இ - ள். வலிமைபொருந்திய மலைச்சாரலில் விளங்குகின்ற இலங்கைத்தீபம் முழுவதையும் இடையறாதகாவலைச் செய்கின்ற திண்ணியதோளையுடைய ஒரு பெரிய பூதம், குளிர்ந்ததிரைபொருந்திய சமுத்திரக்கரையினிடத்தே இருக்கின்ற மாலையணிந்த இராசனைக்கண்டு நமஸ்கரித்துத் தன்னுடைய இருகண்களும் களிப்பு மிக்கு எ - று. (௨௪)

மன்னவனீயார்யாதுநின்னாமம்வருகின்ற
தென்னநினைந்தோவேதுபொருட்டாலிவண்வந்தாய்
தென்னிலைவாரிச்சலதிகடக்குந்திறனேதோ
மின்னியவுறவேதெதுபதியென்னவினவிற்றால்.

இ - ள். இராசாவே! நீ யாவன்? நின்பெயர் யாது? நீவருகின்றது யாது நினைந்து? இங்கே யாதுகாரணத்தால் வந்தாய்? தெற்குப்பக்கத்தினிலைத்த சமுத்திரத்தைக் கடந்த உபாயம் யாது? உனது இனிய வமிசம் யாது? ஊர் யாது? என்று வினவிற்று எ - று. (௨௫)

மோதிகல்வென்றிப்படையுளவெல்லாமுனைதோற்றே
ஏதமதின்றிச்சலகாமியினாலிவண்வந்தேன்
பேதமிலின்சொற்கதிர்மரபுள்ளேன்பெயர்சிங்க
பூதரனுமென்பதியுமயோத்திப்புரியென்றான்.

இ - ள். மோதுகின்ற வலிமையையும், வெற்றியையுமுடைய படையாயுள்ளவெல்லாம் போரிலே தோல்வியடைந்து, இடையூறின்றிச் சலகாமியினால் இவ்விடத்தே வந்தேன். பேதமில்லாத இனிய சொல்லையுடைய சூரியவமிசத்திலுள்ளேன். என்பேர் சிங்கபூதரனாகும். என் ஊரும் அயோத்தியாபுரியாகும் என்று பூதம் வினவிய வினாக்களுக்கு விடைசொன்னான்.

மகிபனுரைக்குந்திருமொழிகேட்டேமாபூதந்
தகுமிவனென்னுந்தன்மைதனுள்ளந்தனிலெய்தி
அகமகிழ்வுற்றங்கன்புமிகுந்தேயருகிற்சென்
றிகமுழுதாளும்புரவலனேகேளிஃதொன்றே.

இ - ள். அரசன் சொன்ன அழகிய வார்த்தையைக் கேட்டு அந்தப்பெரிய பூதம் இவன் தகுதியடைவானென்னுந் தன்மையைத் தன்மனத்திற்கொண்டு மகிழ்ச்சியடைந்து, அவன்மேற் பற்றுமிகுந்து சமீபத்திற்போய்



இவ்வுலக முழுதையும் ஆளும் இராசாவே! இஃதொருவார்த்தைநகேள்.
இக - இவ்வுலகம். (௨௭)

இப்புவியாளும்பொன்முடிவண்டாரெழில்வேந்தன்
செப்பருமகளாங்கற்புடைமின்னாடிருமங்கை
அப்பெருமாதைவேட்டனையென்றாலவ்வேந்தன்
தப்பறவாளத்தருவனிலங்காதலமென்றான்.

இ - ள். இந்தப்பூமியை ஆளுகின்ற பொன்முடியையுஞ் சிறந்த மாலையழகையுமுடைய அரசனது சொல்லுதற்கரிய மகளாகிய கற்புடைமின்னாளும் இலக்குமியும் ஆகிய அந்தப்பெரிய பெண்ணை விவாகஞ் செய்வாயாயின்; அந்த இராசன் இவ்விலங்காபுரத்தை உனக்குத் தவறில்லாமல் ஆளும்படி தருவான் என்று சொல்லிற்று எ - று. (௨௮)

ஆசகல்வானக்கதிர்மரபுற்றவடல்வேந்துந்
தேசுறுமுள்ளத்திதுதகுமென்றேசிந்தித்து
வீசுறுகாலிற்கடிதெழுபரியின்மேலாகிப்
பேசியகுண்டைப்பூதமுன்னேகப்பின்சென்றான்.

இ - ள். குற்றமற்ற வானக்கதிரவன் மரபில்வந்த வலிமைபொருந்திய சிங்கபூதர இராசாவும் விவேகம்பொருந்திய தன்னுடைய மனத்திலே இது தகுமென்று சிந்தித்து வீசுகின்ற காற்றினும் பார்க்க விரைந்தெழுகின்ற குதிரையின்மேலேறித் தனக்கிதம்பேசிய குண்டைப்பூதம் முன்னே செல்லத் தான்பின்னே போயினான் எ - று. (௨௯)

தினகரன்மணிசேரங்கரையிதித்திருமங்கை
தனைமணநண்ணிச்சிந்தைமகிழ்ந்தத்தலமீது
கனிதருமலிங்கதாபனஞ்செய்தேநாடோறு
மினியவளஞ்சேருண்டியயின்றேயிசைநாளில்.

இ - ள். சூரியகாந்தக் கற்பொருந்திய அங்கநாட்டை யடைந்து அவ்வரசன்மகளை விவாகம் முடித்து மனமகிழ்ந்து அவ்விடத்திலே கேட்டவைகளை மிகக்கொடுக்கும் லிங்கப்பிரதிட்டையுஞ் செய்து எப்பொழுதும் இனிய வளம் அமைந்த உணவுகளை உண்டு இருக்கும் நாளில் எ - று (௩௰)

தேவர்கண்முனிவர்கள்யாவருமாடச்சிந்திக்கு
மாவலிகங்கைச்சீரதுகேட்டேமகிழ்வெய்திப்
பூவலயஞ்சூழ்மனுவழிநண்ணும்புகழ்வேந்துந்
தாவறுமந்நீர்தன்னிடைமூழ்கித்தகவுற்றான்.

இ - ள். தேவர்களும் முனிவர்களும் பிறருந் தீர்த்தமாடச் சிந்திக்கின்ற மாவலிகங்கைச் சிறப்பைக் கேட்டு மகிழ்வடைந்து பூமண்டலத்தாற் சூழப்பட்ட மனுவமிசத்தில் வருங்கீர்த்தியமைந்த சிங்கபூதரவேந்தனும் அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து தகுதிபெற்றான் எ - று. (௩௧)

அவ்வழியருகேயாவருநண்ணற்கரிதாகி
வெவ்வியனுப்பட்பரமனதருளான்மிளிர்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வியலிங்கங்கண்டரசுள்ளந்திகழ்வுற்றே
இவ்வழியிற்றைப்பூசையிவர்க்காமெனவெண்ணி.

இ - ள். அவ்விடத்திலே பக்கத்தில் யாவருஞ் செல்லுதற்கரிதாகிய வெவ்விய காட்டினடுவே சிவகிருபையினால் விளங்குகின்ற திவ்வியலிங்கத்தைக் கண்டு அவ்வரசன் மனங்கிளர்ந்து இங்கே யின்றைப்பூசை இக்கடவுளுக்கு ஆகுமென்று மனத்திலே நினைத்து எ - று. (௬௨)

மாடுபிறங்குங்காடுகளைந்தேவளமேவும்
பீடுவிளங்கக்கோயிலமைத்தேபெருமானுற்
கேடமருஞ்சொற்பூசைபுரிந்தேயெழிலாரும்
பாடலிரங்கற்பல்லியமுற்றும்பாவித்தான்.

இ - ள். பக்கத்தில் விளங்கிய காடுகளை வெட்டிக் குடியிருக்கையாகப் பொருந்தும் பெருமை விளங்கக் கோயிலையமைத்துச் சிவபிரானுக்கு விதிப்படி பூசைசெய்து அழகிய பாடல்களையும், பலவாச்சிய முழக்கங்களையும் முழுமையுமெழுப்பினான் எ - று. (௬௩)

கோக்களனந்தம்வேழமனந்தங்குழைவேலே
மாக்களனந்தஞ்சொன்னமனந்தம்வயன்மேவும்
பூக்களனந்தந்தேர்களனந்தம்பொழின்மன்னுங்
காக்களனந்தம்மனுகுலவேந்தன்சமைத்தான்.

இ - ள். அளவில்லாத பசுக்களையும், அளவில்லாதயானைகளையும், அளவில்லாத தொழிலமைந்த காட்டுமிருகங்களையும், அளவில்லாத திரவியங்களையும், அளவில்லாத வயல்பொருந்தும் பூமிகளையும், அளவில்லாததேர்களையும், அளவில்லாத பூந்தோட்டம்பொருந்திய சோலைகளையும் மனுகுலராசன் உண்டாக்கினான் எ - று. (௬௪)

வேறு.

ஆரணத்தாற்றென்கரைசையத்தர்தமைப்பூசித்த
காரணத்தால்வானக்கதிரோன்மரபுதித்த
பூரணத்தான்சிங்கபுயபூதரவேந்தன்
தாரணிக்கெல்லாமதிபன்றானாகிமண்புரந்தான்.

இ - ள். வேதவிதிப்பிரகாரமாகத் திருக்கரைசைப்பெருமானைப் பூசைசெய்த காரணத்தினாலே சூரியவமிசத்திலுதித்த நிறைகுணத்தானாகிய சிங்கபுயபூதர ராசன் பூமியெல்லாவற்றிற்கும் இராசாவாய்ச் சனங்களைக்காத்தான் எ - று. (௬௫)

அத்தகையபூசையனந்தநாட்சென்றதற்பின்
சுத்தநறுந்தேன்காச்சொரிந்துமலர்பூசிப்ப
அத்திமுழக்கெடுபப்வாயமயினடிக்க
வித்தகனேகாந்தமேன்மையாய்வீற்றிருந்தார்.



இ - ள். அவ்விதமான பூசையினால் அநேகநாள் சென்றபின் சுத்தமான நறிய தேனைச் சோலை சொரிந்து மலரால் அர்ச்சிப்ப யானையாரவாரிப்ப அழகிய மயில்கள் நடிக்கச் சிவபெருமான் ஏகாந்தமேன்மையாய் எழுந்தருளியிருந்தார் எ - று.

சிலநாளாக அர்ச்சனையின்றி இருந்ததென்பது தாற்பரியம். ஏகாந்தம் - தனிமை. (௬௬)

அத்தகைமைந்தபல்லுகங்களப்பரிசுசென்றதன்பின்
ஓங்குபுகழ்தோன்றுமபர்மாக்களிலோரேழைமையோன்
வீங்கியகான்சேதிக்கவேண்டியரிவாளதனைத்
தீங்கில்சிலையென்றெண்ணித்தேவர்மேற்றீட்டினனால்.

இ - ள். அவ்விதமாகப் பூசையின்றியமைந்த பலவுகங்கள் மேற்சொல்லியவாறு சென்றபின்பு ஓங்கியபுகழ் தோற்றப்பெற்ற பெரியோர்களுள்ளே ஒருவறிஞன் மரங்கள் மிகுந்த காட்டைச் சேதிக்க விரும்பி அரிவாளைக் குற்றமற்ற கல்லென்றெண்ணிச் சிவலிங்கத்தின்மேலே தீட்டினான் எ - று.

கைவாங்குமுன்னமவன்கண்ணுந்தெரியாமன்
மெய்வாங்குசெங்குருதிமேதினிமீதேகுதிப்ப
மைவாங்குமேனிமனமுநடுநடுங்கிச்
செய்வான்செயலறியேன்றேவேயெனமொழிந்தான்.

இ - ள். தீட்டிய கையை எடுத்தற்குமுன்னே அவ்வறிஞன் கண்ணுந்தெரியாமல் சரீரத்தினின்றும் வருகின்ற இரத்தம் பூமியிலே குதிக்கக் கரியவளைந்த மேனியும் மனமும் நடுநடுங்கிச் செய்தற்கு யாதொருதொழிலையும் அறியேன் தேவனே என்று சொல்லினான் எ - று. (௬௭)

மற்றவற்குக்கண்வெளிக்கமல்குங்குருதியைக்கண்
டெற்றிபவாறென்னேயெதுவோவிளைந்ததெனப்
பற்றியதன்னுள்ளம்பதறித்தடுமாறி
யுற்றபடிபோயன்பருள்ளார்க்குரைசெய்தான்.

இ - ள். பின் அவனுக்குக் கண்ணானது வெளிப்படப் பெருகும் இரத்தத்தைக்கண்டு புடைத்தகாரணம்யாது? யாதோவிளைந்ததென்று நிச்சயித்துத் தன்னுள்ளம்பதறித் தடுமாறிச் சென்று தன் அன்பராயுள்ளார்க்கு உற்றகாரியத்தைச் சொல்லினான் எ - று. (௬௮)

கேட்டன்பருள்ளாருடனேகிளர்ந்தெய்தி
நீட்டுஞ்சிவக்கொழுந்தென்றெல்லோருங்கைகுவித்துத்
தீட்டுங்குடாரந்திறலரிவாள்கைப்பற்றிக்
காட்டின்பெருவலியுந்தாறுங்களைந்திட்டார்.

இ - ள். அன்பராயுள்ளார்கள் கேட்டு உடனேயெழுந்து அங்கேசென்று தாபனஞ்செய்யப்பெற்ற சிவலிங்கப்பெருமானென்று நினைந்து எல்லாரும் அஞ்சலிசெய்து தீட்டியகோடரியையும் வலிய அரிவாளையும் கையிற்பற்றிக் காட்டினது பெரியகொடிகளையுஞ் சிறுபற்றைகளையுங் களைந்தார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடும்படருந்துகளற்றபின்கடுகித்திகழ்பாரை
மேடுங்குழியுமகலச்சமமாய்மிகுநன்னிலமாக்கித்
தோடுங்குழையுங்குழையப்பொதுவிற்சுருதிப்பொருள்போனின்
றாடும்பெருமானுறைதறகிடமுண்டாக்கும்படியெண்ணி.

இ - ள். காடும் வழிகளுங் குற்றமற்ற பின் விரைந்து விளங்குகின்ற பூமியைமேடும் பள்ளமும்நீங்கச் சமமாய்மிகுந்த நல்லநிலமாக்கித் தோடுங் காதுங் குழையச்சபையில் வேதப்பொருள்போல நின்றாடுங் கடவுளிருத் தற்குக் கோயிலை உண்டாக்கும்படிநினைத்து எ - று. (சக)

சிற்பத்தொழிலோர்தமையழைத்துத்திகழச்சிவன்கோயில்
கற்பித்திடுவீரென்றவர்கூறுங்கடிதின்முடிப்பமெனக்
கர்ப்பக்கிருகமாமண்டபமுங்கிளர்செங்கலினுக்கிப்
பொற்பிற்றிருவார்மண்டபமும்பொலியும்படிசெய்தார்.

இ - ள்- அவர்கள் சிற்பத்தொழில் வல்லாரை வருவித்து ஒருசிவால யத்தை விதிப்பிரகாரம் விளங்கும்படி செய்யுங்களென்று சொல்லச்சிற்ப நூல்வல்லாரும் விரைவில் முடிப்போமென்று கருப்பக்கிருகத்தையும், மகா மண்டபத்தையுந் தக்கசெங்கலினாற்செய்து அழகினுலிலக்குமி தங்கிய நடு மண்டபத்தையும் பிரகாசிக்கும்படி செய்தார் எ - று. (சஉ)

கோயுஞ்சிகரங்கடிதினியற்றிச்சூழ்மாமதில்கட்டி
யேயுந்தகைமைச்சுருளும்படியுமெழிலாம்படிசெய்தே
ஆயுந்தகவான்மறுமண்டபமுமமைத்துக்குறைதீர்த்துப்
பாயும்விடையுந்திருமுன்னிறுவிப்பலிபீடமுமிட்டார்.

இ - ள். விதியமைந்த கோபுரத்தையுஞ் சீக்கிரத்திற் செய்து சூழும் பெரியமதிலையுங்கட்டிப் பொருந்திய தகுதியையுடைய படிச்சுருளையும், படி யையும் அழகுண்டாகும்படி செய்து, ஆராயுந் தகுதியினுன் மற்றைய மண் டபத்தையுஞ் செய்து எஞ்சிய திருப்பணிகளையும் முடித்துப் பாய்கின்ற நந் தியந் தேவரையும் சந்நிதியில் நிறுத்திப் பலிபீடத்தையுஞ் செய்து முடி த்தார்கள் எ - று. (சங)

ஆங்கவைகண்டேயனைவருமகிழ்வுற்றர்ச்சனைமுற்செய்து
பாங்குறு மறையோர்தம்மையழைத்துப்பார்த்திவன்முன்சென்றே
வாங்கியநிலமுங்கரையும்பிறவுமகிழ்வொடுகன்னட்டித்
தீங்கறுபூசனைகொள்வகைசெய்தார்தேவர்கள்பெருமனூர்.

இ - ள். அங்கே சிற்பநூல் வல்லாராற் செய்யப்பட்ட திருப்பணிகளை எல் லாரும் பார்த்து மகிழ்ச்சியடைந்து அர்ச்சனையை முன்னரேசெய்து உரிமை யமைந்த பிராமணரை அழைத்து அரசன்முன்சென்று வாங்கிய நிலங் களையும், கரையையும் பிறவற்றையும் மகிழ்ச்சியோடும் எல்லைக்கல்லு நட்டுச் சிவலிங்கப்பெருமான் குற்றமற்ற பூசையைக் கொள்ளும்படி செய்தார்கள்.

வேறு.

இங்கிலையுலகோரன்பொடுபுரியவேழிரண்டுலகெலாந்தழைச்சப்
பொன்னணிபுலகிற்றிங்கண்மும்மாரிபொழிந்திடக்கூழ்விளைவெய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org